Registered as a NewsPaper

இலவச பிரதி

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-29 | 15-11-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-271

உலகில்
215 நாடுகளையும், 1,20,000 ... களையும்,
50 ... க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பி..
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

## - பொது அமைப்புகள் கூடித்தீர்மானம் -

# தேர்தலைப் புறக்கணிப்பதாகவும் தேர்தல் நாளைத் துக்கநாளாகவும் அறிவிப்பு

## வாக்களிக்க நிர்ப்பந்திக்கப்பட்டால் செல்லுபடியற்றதாக்கிவிடுமாறும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா சனாதிபதித்தேர்தலைப் புறக்கணித்து அன்றைய தினத்தை துக்கதினமாக அநுஷ்டிப்பதென்றும் இராணுவத்தினர் அல்லது சிறிலங்காப் பொலிசார் அல்லது தேசவிரோத சக்திகளின் அச்சுறுத்தல், அழுத்தத்தின் காரணமாக மக்களில் யாருக்காவது வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் வாக்குச்சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கு மாறும் நேற்று யாழ்.குடாநாட்டின் பல்வேறு அமைப்புக்களும் கோரியுள்ளன.**

நேற்று மாலை 3.30 மணிக்கு பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் யாழ்.பல்கலைக்கழக சமூக பிரதிநிதிகள், யாழ். குடாநாட்டின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய துறைசார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடி இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று சிறிலங்காப் பொலிசார் மீதான தடுப்புக்காவல் 28 வரை நீடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்த சமயம் தமிழீழகாவல் துறையினரால் கைது செய்யப்பட்டிருந்த மூன்று சிறிலங்காப் பொலிசார் மீதான தடுப்புக்காவல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த (10.09.2005 அன்று இவ்வாறு அனுமதியின்றி உள்நுழைந்த கே.ஏ.பி. சரத் ( குளியாப்பிட்டிய வயது-39), பி.டபிள்யூ போபிட்டிக்கொட (நீர்கொழும்பு வயது-35), டபிள்யூ.ஜி.டி.எஸ் கேமத (கொறன வயது 30) ஆகிய மூன்று சிறிலங்காப்பொலிசார் மீதான விசாரணை தமிழீழ நீதிமன்றில் நீதியாளர் சாதனா முன்னிலையில் நேற்றுபகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.மூன்று பொலிசார் மீதான விளக்கமறியலையும் நீடிக்கவேண்டும் எனக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முடிவில் மாற்றமில்லை தமிழ்ச்செல்வன் கூறியதாக சந்திரசேகரன்

சனாதிபதித்தேர்தல் தொடர்பில் தாம் மேற்கொண்ட கொள்கை தீர்மானத்தில் மாற்றங்கள் இல்லை எனவும் வடக்குகிழக்கு மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு தாம் தடையாக இருக்கப்போவதில்லை எனவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு. ப. தமிழ்செல்வன் தம்மிடம் தெரிவித்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கிளிநொச்சியில் வைத்து தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளதாக மேலும் அவர் கூறினார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சந்திப்புக் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தாம் சந்திக்கவுள்ளதாக மலையகமக்கள் முன்னணியின் தலைவர் தெரிவித்தார். (32)

## இறுதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மகிந்த கலந்துகொள்ளவில்லை

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தன. ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரச்சாரக்கூட்டம் கொழும்பு மருதானையிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷவின் பிரச்சாரக் கூட்டம் கொழும்பு பொரளையிலும் நடைபெற்றது. எனினும் மகிந்தராஜபக்ஷ இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவர் அலரிமாளிகையில் இருந்தவாறு தொலைபேசி மூலம் உரையாற்றினார்.

ஆறு தற்கொலைக் குண்டுதாரிகள் மகிந்தவை இலக்குவைத்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடா கடற்பரப்பில் இனந்தெரியாத கப்பல்

### -முப்படைத் தளபதி தயாசந்தகிரி

யாழ். குடா கடற்பரப்பில் இனந்தெரியாத கப்பல் ஒன்று சென்றதாகவும் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை அது ஏற்றிச் சென்றிருக்கலாம் என்று கருதுவதாகவும் சிறிலங்காவின் முப்படைத் தளபதி தயாசந்தகிரி தெரிவித்துள்ளார்.

அந்தக் கப்பலைத் தேடும் முயற்சியில் சிறிலங்காக் கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் எனவும் சிறிலங்கா சனாதிபதி தேர்தல் நாளின் போது தம்மீது தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கக் கூடும் என்று கூறிய தயாசந்தகிரி, இந்தத் தாக்குதல்களை மேற்கொள்ள வந்த விடுதலைப்புலிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் பிரச்சினையுடன் எனக்கு எதுவித தொடர்புமில்லை

### - ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

விடுதலைப்புலிகளின் பலத்தை நான் குறைக்கவும் இல்லை, கருணா குழுவின் பிரச்சினையுடன் எவ்வித தொடர்பும் இல்லை என ஊடகம் ஒன்றிற்கு அளித்த நேர்காணலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்..

இது தொடர்பாக அந்த நேர்காணலில் ரணில் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளின் பலத்தை நான் குறைக்கவும் இல்லை, அந்த அமைப்புக்குள் கருணா பிரிவின் பிரச்சினையுடன் எனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. நான் கருணாவைச் சந்தித்ததுவும் இல்லை. அன்ரன் பாலசிங்கத்தையே பிரேமதாச அரசாங்கத்தின் பேச்சுவார்த்தையின் போது சந்தித்தேன். நான் விடுதலைப்புலிகளை இணைத்து செயற்பட முனைந்தேன். கருணா பிரச்சினை 2004 மார்ச் மாதத்திலேயே உருவானது. பாதுகாப்புப் பிரிவோ, புலனாய்வுப் பிரிவோ அறிந்திருக்கவில்லை. பத்திரிகைகளில் தகவல்கள் வெளிவந்தன. அதன் பின்பு தான் இது தெரியவந்தது. அது அவர்களது உள்பிரச்சினை.இதில் நாம் தலையிடத்தேவையில்லை. உண்மையில் இந்த நிகழ்வு துரதிர்ஷ்டவசமானது. பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. சமாதான நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. எவரும் கொலை செய்ய இடமளிக்க மாட்டோம். ஒவ்வொரு குழுக்களும் ஆயுதங்களுடன் கிழக்கிலும், கொழும்பிலும் செயற்படுவதை இந்த நாட்டு மக்கள் விரும்ப மாட்டார்கள்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உந்துருளி மின்கம்பத்துடன் மோதியது யாழ்.இல் இளைஞர் படுகாயம்

(வலிகாமம்)

யாழ். பருத்தித்துறை வீதி கோப்பாய் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற உந்துருளி விபத்தில் உந்துருளியில் வந்தவர் படுகாயத்திற்குள்ளானார். காயமடைந்தவர் உடனடியாக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவ் விபத்தில் யாழ்.கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த எஸ்.பானுரூபன்(வயது-25) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.உந்துருளி வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதிலேயே மேற்படி விபத்துச் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (37)

## நீரில் மூழ்கி சிறுவன் பலி

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு கேப்பாப்புலவு புதுக்குடியிருப்பில் சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளான். இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; நேற்றுக் காலை கேப்பாப்புலவு புதுக்குடியிருப்பில் கிணற்

(16 ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் - 27

"ஒரு உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்"

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## வரிவிளம்பரம்

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

இயந்திரத்தில் செய்த சீமெந்துக்கல் சிவா பொறியியற் தொழிலகம் 4ஆம் கட்டை அம்பாள் புரம் வன்னிவிளாங்குளத்தில் (மாங்குளம்) விற்பனைக்குண்டு.
அளவுகளும் விலையும்
5"x6" x12"=ரு25.00, 4"x6" x14"=ரு23.00
(6841)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி அச்சுப் பதிப்புத் துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக்கூடிய

**Adobe Pagemaker**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

***தொடர்புகட்கு:***
வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி,கிளிநொச்சி (சி.13074)


## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## கூறுவிலை கோரல்கள்

**சிறிய அளவிலான உட்கட்டுமான புனரமைப்பிற்கும் தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின் (SIRUP) கீழ் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதிவழங்கல்கள் மூலம்.**

**வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகட்டுவான் வீதியில் 23.64 - 23.75 கி.மீ.பகுதியின் ஓரக்கரைச் சுவர்களை மீள் புனரமைத்தல்**

01. மாகாணப்பணிப்பாளர்/வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) மேற்குறிப்பிட்ட வேலைக்கான மூடிய கேள்விப்பத்திரங்களை மாகாணப்பணிப்பாளர்/ வ-கி(வடக்கு) யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச்சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 09.12.2005 அன்று பிற்பகல் இரண்டு மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு -கிழக்கு (வடக்கு) யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா காரியாலயங்களில் கிடைக்கும் கேள்விப்பத்திரப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 16.11.2005 தொடக்கம் 08.12.2005 வரை மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணமாக ரூபா 750.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
02. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.
03. தகுதிவாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.
    - அ) கேள்வி கோரலிற்கு விண்ணப்பிப்பவர் தன்னை இக்டாட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையில் தரம் M-7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
    - ஆ) கேள்வி கோரலிற்கு விண்ணப்பிப்பவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியான ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.
04. கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு/கிழக்கு (வடக்கு) அவர்களின் யாழ்ப்பாண மற்றும் கண்டிவீதி வவுனியா, பிரதம பொறியியலாளர் கடற்கரை வீதி யாழ்ப்பாண காரியாலயங்களில் பார்வையிடலாம்.
05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாகும்.
06. கேள்விப் பாதுகாப்புக் கட்டணத்தொகையான ரூபா முப்பதாயிரம் (30.000.00) பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய பாதுகாப்பு பணப்பத்திரங்களைக் கொண்டிராத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. முன்கேள்வி கோரல் கூட்டம் 30.11.2005 அன்று முற்பகல் 10.00 மணிக்கு மாகாணப் பணிப்பாளர், வடக்கு/கிழக்கு (வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல:761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
08. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இருபிரதிகள் மாகாணப்பணிப்பாளர்/ வ-கி(வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல: 761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படல்வேண்டும்.
09. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை இல:761 கடற்கரை வீதி,யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும். குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.
10. மேலதிக விபரங்களிற்கு தயவுசெய்து மாகாணப்பணிப்பாளர்/ வடக்கு -கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா, தொலைபேசி இலக்கம் 024.222 2826 - 024-2220679 தொலைநகல் இலக்கம் 024-2222826, மின்னஞ்சல் முகவரி rdanorth@sltnet -lk மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வடக்கு) யாழ்ப்பாணம், தொலைபேசி இலக்கம் 021-222 2517 தொலைநகல் இலக்கம் 021-2222517, மின்னஞ்சல் முகவரி rdapdncnj@Slt. lk பிரதான பொறியியலாளர் யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021-2222968 மின்னஞ்சல் முகவரி rdacejf@sltnet. lk என்பனவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

**மோசஸ் மரியதாஸன்,**
**மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வடக்கு),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**யாழ்ப்பாணம்/வவுனியா.**

(சி-13337)

# க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

(அலுவலக செய்தியாளர்)

இவ்வருடம் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் தோற்றும் கணித,விஞ்ஞான பாட மாணவருக்கான முன்னோடிப்பரீட்சை ஒன்றினை கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழக புகுமுகமாணவர் ஒன்றியமும், மாணவர் அமைப்பினரும் இணைந்து நடத்தவுள்ளனர்.

நாளைய தினம் கணித பாடப்பரீட்சையும், 19 ஆம் திகதி சனிக்கிழமை விஞ்ஞானபாடப் பரீட்சையும் நடைபெறும். இதில் தோற்றுகின்ற மாணவர்களுக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப் பட்டதன் அடிப்படையில் அந்தந்தப்பாடசாலை யில் பரீட்சை நடைபெறும்.

க.பொ.த. சாதாரணதரத்தில் பயிலும் அனைத்து மாணவர்களையும் தவறாது இப்பரீட் சையில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (கு)


## நீங்காத நினைவுகளுடன் நான்காம் ஆண்டில்...

அன்னை மடியில்
29 - 06 - 1975



ஆண்டவன் அடியில்
01 - 11 - 2001

### அமரர் கோமுகி பிரபாகரன்

**(கொ.அ.த.க. பாடசாலை ஆசிரியை)**
**திதி - 15.11.2005**

*ஆண்டு நான்கு ஆனாலும் அகலவில்லை உன் நினைவு*
*கண்ணயர்ந்து போனாலும் கலையவில்லை உன் உருவம்*
*எம் மூச்சு உள்ளவரை அழியாது உன் ஞாபகம்*
*உன் ஆத்மா சாந்தி பெற உளம் நிறையவேண்டுகின்றோம்.*

*சொந்த முகவரி:-*
கரம் பொன்கிழக்கு
ஊர்காவற்றுறை
*தற்காலிக முகவரி:-*
4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.

(6924)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் மாலையா நிர்மலகாந் [யூவி]



**அரசடி வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

மலர்வு: 14.12.1982
உதிர்வு: 26.11.2004

நேற்றுநீ நின்று சிரித்ததும்
நெருங்கிப் பழகிப் பழகிப்
பார்த்தவர் மனங்கள் ஏங்கும்
பாசம் வளர்த்ததும் நிர்மல் - உன்
ஆற்றலின் உச்சம் கண்டோம்
ஆயினும் நிர்மல் எம்மைத்
தேற்றிட முடியாத் துயரில் - நீ
தேம்பிட வைத்தாய் ஏனோ?

வாய்விட்டு அழுதும் என்ன?
வார்த்தைகள் கூறி என்ன?
ஓய்வற்ற வாழ்வில் யார்க்கும்
ஓய்வெனில் மரணம்! நீயும்
ஓய்வெடுத் தடைவாய் சாந்தி!
ஓய்வெடத் தடைபாய் சாந்தி! சாந்தி

**அண்ணன்**
**உமாகணேசன்**
**மற்றும் சகோதரிகள்**

(6643)

# கொலம்பியாவில் கைக்குண்டு தாக்குதல்; ஊடகவியலாளர் பலி

கொலம்பியாவில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் ஊடகவியலாளர் ஒருவர் உட்பட இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு வயதுச் சிறுமியும் அவரது ஏழு வயதுச் சகோதரனுமே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ள சிறுவர்களாவர். இச்சம்பவத்தில் காயமடைந்த சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு காரணமானவர்களைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.



நியூசிலாந்தின் விரைவு போர்க் கப்பலான HMNZ வெலிங்டனாவை அழிக்க முடிவு செய்தனர். தலைநகர் வெலிங்டன் கடற்கரை அருகே கப்பலில் குண்டு வைத்து நேற்று முன்தினம் தகர்க்கப்பட்டது. ஒரே நிமிடத்தில் கடலில் கப்பல் மூழ்கியது. கரையிலிருந்தும் உலங்குவானூர்திகளில் பறந்தபடியும் ஆயிரக்கணக்கானோர் இதனைப் பார்வையிட்டனர்.

# மருத்துவ உலகில் அதிசயம்; "எய்ட்ஸ்" நோயாளி மீண்டார்

(லண்டன்)

உலகை அச்சுறுத்தி வரும் ஆட்கொல்லி நோயான ' எய்ட்ஸ்' இல் இருந்து இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஆண்ட்ரு ஸ்டிம்சன் என்பவர் முழுமையாகக் குணமடைந்து உலகை ஆச்சரியத்திற்குள்ளாக் கியுள்ளார் ஒரு ஆண்டுக்கு மேலாக எய்ட்ஸ் நோய்க் கிருமியால் பாதிக்கப்பட்ட அவரை சமீபத்தில் வைத்தியர்கள் சோதனை செய்தபோது அந்த நோயின் தாக்கத்தில் இருந்து அவர் முழுமையாக விடுபட்டதை அறிந்து வைத்தியர்கள் வியப்பில் மூழ்கினார்கள். இது மருத்துவ உலகின் அதிசயம் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய் குணமானது எப்படி? என்ற இரகசியத்தைக் கண்டறிவதற்காக அவரிடம் மருத்துவ பரிசோதனை நடத்த வைத்தியர்கள் முடிவு செய்துள்ளனர்.

# பிரான்சில் ஏற்பட்ட வன்முறைகள் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவல்

(பரிஸ்)

பிரான்சில் இரண்டு வாரங்களுக்கு மேலாக தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்முறைகள் ஐரோப்பாவில் ஏனைய நாடுகளுக்கும் பரவியுள்ளது.

பெல்ஜியம், நெதர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் வன்செயல்களும் தீவைப்பு சம்பவங் களும் இடம்பெற்றுள்ளன.

பிரான்ஸ் அரசாங்கம் கடந்த புதன்கிழமை பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலைமையை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற் கான பிரேரணையை நேற்று அங்கீகரித்துள்ளது.

இதனடிப்படையில் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்யவும், வீடுவீடாகத் தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளவுள்ளது.

வன்செயலினால் பாதிக்கப்பட்ட பிரான்சில் புனரமைப்புக்களை மேற்கொள்ள ஐந்து கோடி யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. நீண்டகால உதவியாக நூறு கோடி யூரோக்கள் வழங்கப்படவுள்ளன.

ஆபிரிக்க இளைஞர்கள் இருவர் பொலிசாரால் துரத்திச் செல்லப்பட்டபோது அவர்கள் மின்சாரம் தாக்கிப் பலியானதை அடுத்து அங்கு வன்செயல்கள் இடம்பெற்று வரு கின்றன. இதுவரை இந்நாடுகளில் ஐயாயிரம் வரையான வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

# சிறைச்சாலை மீது தீவிரவாதிகள் தாக்குதல்; மாவோயிஸ்ட் தலைவர் 300 கைதிகள் தப்பினர்

— பீகாரில் பரபரப்புச்சம்பவம்

*(பீகார்)*

***பீகாரில் ரகனாபாத் மாவட்டத்தில் சிறைச்சாலை மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். சிறையிலிருந்த மாவோயிஸ்ட் இயக்கத்தலைவர் அஜேய் கானுவை அவர்கள் மீட்டுச்சென்றுள்ளதுடன், அங்கிருந்த 300இற்கும் மேற்பட்ட கைதிகளும் தப்பிச்சென்றுள்ளனர்.***

இந்தச் சம்பவத்தின்போது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிறைக்காவலரும் ஒரு கைதியும் உயிரிழந்தனர்.

படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த தீவிரவாதி ஒருவரின் உடல் சிறைச்சாலையின் அருகிலுள்ள ஒரு ஆற்றங்கரையிலிருந்து மீட்கப்பட்டது. சிறைச்சாலையிலிருந்த 16 துப்பாக்கிகளையும் வெடிமருந்து களையும் தீவிரவாதிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அலு வலகம் அருகே இந்தச் சிறைச்சாலை இருக்கின்றது. கடும் பாதுகாப்பையும் மீறி தீவிரவாதிகள் இத் தாக்கு தலை நடத்தியிருப்பது அம்மாநிலத் தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சிறைச்சாலையில் 650 இற்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டி ருந்தனர்.

# ஈராக்கில் இருந்து அமெரிக்கப்படை வாபஸ் அடுத்த ஆண்டு இறுதியிலேயே முடிவு

— ஈராக் சனாதிபதி தெரிவிப்பு

(ரோம்)

ஈராக்கில் இருந்து அமெரிக்கக் கூட்டுப்படைகள் வாபஸ் பெறுவது குறித்து அடுத்த ஆண்டு இறுதியி லேயே முடிவு எடுக்கப்படும் என்று ஈராக் சனாதிபதி ஜலால் தலபானி தெரிவித்துள்ளார்.

ஈராக் சனாதிபதி ஜலால் தலபாணி இத்தாலி நாட்டில் ஒருவாரம் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ரோம் நகரில் நிருபர்களுக்குப் பேட்டி யளித்த அவரிடம் ஈராக்கிலிருந்து அமெரிக்கக் கூட்டுப்படை எப்போது வெளியேறும் என்று கேட்கப்பட்ட போது பதிலளிக்கையிலேயே அவ இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டுப் படைகள் வெளி யேறுவதற்கு முன்பு ஈராக் பொலி சாரும், இராணுவமும் பயிற்சி பெற வேண்டும் அந்தப் பணி துரிதமாக நடந்து வருகிறது.

வெளிநாட்டு இராணுவம் வாபஸ் பெறுவதில் தாமதிப்பதாலேயே வன் முறைகள் நடப்பதாகக் கூறுகின்றார் கள். ஆனால் தீவிரவாத செயல்க ளால் ஈராக் மக்கள்தான் பாதிக்கப் படுகிறார்கள் கூட்டுப்படைகள் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

மலேசியாவில் 17.5 இலட்சம் இந்துகள் வசிக்கின்றனர். தலை நகர் கோலாலம்பூரில் உள்ள ஸ்ரீ சுப்பிர மணிய சுவாமி கோ விலிலுட தாமா பட்சா; என்ற திருவிழா நேற்று முன் தினம் நடந்தது. இதில் பெருமளவான இந்துக கள் கலந்து கொண ் டனர்.



# இங்கிலாந்து ராணி எலிசபெத் முஸ்லிம்களின் முதல் எதிரி

—— *அல்–ஹைய்தா தளபதி*

(லண்டன்)

இங்கிலாந்து ராணி எலிசபெத் முஸ்லிம்களின் முதல் எதிரியாக இருக்கிறார் என்று அல்-ஹைய்தா தளபதியான அல் ஜவாஹிரி கூறி யுள்ளார்.

இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரில் கடந்த ஜூலை மாதம் ஏழாம் திகதி நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 56 பேர் பலியானார் கள்.

இதற்குப் பொறுப்பு ஏற்றும் இதை நியாயப்படுத்தியும் அல்-ஹைய்தா தளபதி அல்ஜவாஹிரி பேசிய 27 நிமிட ஒளிநாடா ஒன்று இங்கி லாந்து நாட்டுப் பத்திரிகையான சண்டே ரைம்ஸுக்கு கிடைத்துள்ளது.

அதில் பேசிய அல்ஜவாஹிரி இஸ்லாமின் எதிரிகளில் முதலாமவர் ராணி எலிசபெத்தான். இங்கிலாந்து கிறிஸ்தவ திருச்சபைகளின் தலைவ ராக இருக்கும் ராணி எலிசபெத்தின் விருப்பத்துக்கு ஏற்ப இங்கிலாந்தில் உள்ள முஸ்லிம் தலைவர்கள் செயற்பட்டு வருகிறார்கள் என்று கூறியுள்ளார்.



நேற்று ஜெருசலேத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு முன்பு இஸ்ரேலியப் பிரதமரும் அமெரிக்க ராஜாங்க செயலாளர் கொண்டலிசா ரைசும் சந்தித்துப்பேசுகின்றனர்.

# பஸ் குடைசாய்ந்து ஆற்றில் மூழ்கியது; 5 பேர் பலி; 7 பேர் கவலைக்கிடம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட பகுதியில் காஷ்மீர் மக்களை ஏற்றிவந்த பேருந்து ஒன்று குடைசாய்ந்து ஆற்றினுள் மூழ்கியதில் ஐந்து பேர் பலியா கினர்கள் மேலும் காயமடைந்த ஏழு பேரின் நிலை கவலைக் கிடமாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரின் ஷெப்பானி பிரதேசத்தில் நீலம் பள்ளத் தாக்கிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. பேருந்து வேகமாகச் சென்றதனாலேயே இவ்விபத்து இடம்பெற் றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர்களில் மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி மற்றும் மன்சரிவின் காரணமாக வீதிகள் பல மூடப்பட்டுள்ள நிலையில் நீலம் பள்ளத்தாக்கு விதியானது ஆபத்துக்களின் மத்தியிலும் நிவாரணப் பணிக்காகத் திறந்து விடப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

# சீனாவில் விசவாயுக்கசிவு; ஒரு இலட்சம் பேர் இடம்பெயர்வு

(பீஜிங்)

சீனாவில் இரசாயன ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் விசவாயு கசிந்துள்ளது. இதைத் தொடர்ந்து அந்த நகரில் உள்ள ஒரு இலட்சம் பேர் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சீனாவில் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஜிலின் நகரில் உள்ள அரசுக்குச் சொந்தமான இரசாயன பெற்றோலிய ஆலையிலேயே இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டு மணி நேரம் இந்த ஆலையின் பல பகுதிகள் வெடித்துச் சிதறியது. இதன் அருகி உள்ள வீடுகள் கட்டடங்க தீப்பிடித்துக் கொண்டன.

இவ் ஆலையில் இருந்து விசவா கசிய ஆரம்பித்ததைத் தொடர்ந் அந்த நகரில் இருந்து ஒ இலட்சத்துக்கும் மேற்பட்டோர்க வீடுகளை விட்டு வேறு ஊர்களுக் வெளியேறி வருகிறார்கள்.

இவ் வெடிவிபத்து மற்றும் விசவா கசிவில் உயிரிழப்பு ஏற்பட்டதா இதுவரை தகவலில்லை.



தென்கொரியாவின் சியோல் அருகேயுள்ள கடற்கரையில் மணல் சிற்பக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இதில் தென்கொரிய கலைஞர் ஒருவர் தான் உருவாக்கிய மணல் சிற்பத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் காட்சி.



இரத்தினபுரம் வீதிக்கான பாலம் அமைக்கும் பணிகள் முற்றுப் பெறாமையின் காரணமாக தற்போது பெய்து வரும் மழைகாரணமாக அவ் வீதியால் பயணிப்பவர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலைக்குள்ளாகியுள்ளனர். அமைப்புப் பணிகள் முற்றுப் பெறாதுள்ள பாலத்தினையும், இதன் காரணமாக தற்போது மக்கள் எதிர் கொள்ளும் அவலத்தினையும் படங்களில் காணலாம். கிளி.நகரத்தையும், கிளிநொச்சிப் கிழக்கு பிரதேசத்தையும், இணைக்கும் முக்கிய வீதி இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (படம்சோதி)

## பாம்புக்கடிக்குள்ளாவோர் கிளி.மாவட்டத்தில் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக் கடிக்குள்ளாகி வருப வரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

நேற்று முன்தினம் காலை பூநகரிப் பகுதியில் வைத்து அதேயிடத்தைச் சேர்ந்த ச.துரைசிங்கம் (வயது-47) என்பவர் பாம்பினால் கடியுண்டதன் காரணமாக கிளி. மாவட்ட வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த சனிக்கிழமை கோவிந்தன்கடைச் சந்தியைச் சேர்ந்த கு.விமல்ராஜ் (வயது -47), செல்வாநகரைச் சேர்ந்த து.புஸ்பராசா (வயது-36), தருமபுரத்தைச் சேர்ந்த மகிந்தராசா (வயத-36) ஆகியோர் பாம்புக்கடிக்குள்ளாகி கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் இருபதிற்கும் மேற்பட்டோர் பாம்புக்கடிக்குள்ளாகி கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர் என்பதும் குறிப் பிடத்தக்கது. (சோ)

## திலீபன் மருத்துவ சேவையினரால் வரும் முன் காப்பு நடவடிக்கை

((முல்லை)

பூதன் வயல் சூரிபுரம் கிராம மக்களின் நன்மை கருதி அளம்பில் திலீபன் மருத்துவசேவையினரால் தமிழீழ சுகாதார சேவையின் அனுசரணையுடன் மழை காலத்திற்கான தொற்று நோய் தொடர்பான விழிப்பூட்டலும் பற்சொத்தை தொடர்பான அறிவூட்டலும் குழந்தைகளுக்கான பால்மா வழங்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றன.

இக் கிராம மக்கள் ஏற்கனவே பின் தங்கிய நிலையில் உள்ளதோடு போக்குவரத்து வசதிகளும் இல்லாததனால் மருத்துவ வசதியில்லாமலும் அல்லலுற்றனர். இந் நிலையில் திலீபன் மருத்துவ சேவையினர் விசேட மருத்துவ சேவையினை மேற்கொண்டு மக்களுக்கு நோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் மருத்துக்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (20)

### கற்றல் உபகரணம் வழங்கல்

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் மு/வேணாவில் சிறி முருகானந்தா வித்தியாலயத்திற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி பாடசாலையில் ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் தமிழின்பன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நிதிய உறுப்பினர் ஜீம்சன், கிராம ஊரக வளர்ச்சிச் செயலாளர் கணேஷ், வித்தியாலய செயலாளர் மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி உபகரணங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

## கரைதுறைப்பற்று பிரதேச சபையினரால் கிராமங்களில் கழிவகற்றும் நடவடிக்கை

### -மக்களை ஒத்துழைக்க கோரிக்கை

(முல்லை)

**மாவீரர் தினத்தை முன்னிட்டு கரைதுரைப்பற்று பிரதேச சபையினரால் 11 கிராமங்களில் விசேட கழிவகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

நேற்று முல்லை நகரம், செல்வபுரம், வட்டுவாகல் உண்ணாப்புலவு ஆகிய பகுதிகளிலும், எதிர்வரும் சனிக்கிழமை செம்மலை, குமுழமுனை, அளம்பில் ஆகிய பகுதிகளிலும், எதிர் வரும் 21ஆம் திகதி முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை ஆகிய பகுதிகளிலும் இந்தக் கழிவகற்றல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த தினத்தில் அந்தந்தப் பிரதேசத்தலுள்ள குடியிருப்பாளர்கள் வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள், அரச, அரச சார்பற்ற அலுவலகங்கள் தங்கள் இடத்திலுள்ள கழிவுகளை உக்கக்கூடிய கழிவுகள் வேறாகவும், உக்காத பொருட்கள் வேறாகவும் பொதி செய்து வீதி யோரங்களில் காலை 8.00மணிக்கு முன்பாக வைக்கும்படி கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். இக் கழிவுகள் கரை துறைப்பற்று பிரதேச சபையால் அகற்றப்படும் எனவும், தெரிவித்ததோடு இவ் விடயத்தில் அனைவரும் ஒத்துழைப் புக்களை வழங்கி சுற்றுச்சூழலைத் துப்புரவு செய்து மாவீரர் நாளை புனிதமாக அனுஷ்டிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (20)

## மட்டக்களப்பு எல்லைக் கிராம மக்கள் சிறிலங்காப் படையினரால் அச்சுறுத்தல்

### -சுற்றிவளைப்பு தேடுதல் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான கச்சக்கொடி, சுவாமிமலை மக்கள் சிறிலங்காப் படையினரின் அச்சுறுத்தலுக் குள்ளாகியிருப்பதாக தெரிவித்துள்ளனர். மேற்படி கிராமத்தின் எல்லையில் இராணுவத்தினர் வாகனங்களில் வருவதும், அப்பகுதியில் அதிகம் நடமாடுவதால் பெரிதும் அச்சம், அடைவதாகவும் குறிப் பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்படி கிராமங்களுக்கான ஊரக மேம்பாட்டுப் பேரவை நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் நடைபெற்றபோது ஊரக மேம்பாட்டுப் பேரவை மாவட்ட இணைப்பாளர் க. அரிகரன் அவர்களிடம் நூற்றுக்கணக்கான மக்கள் படையினரின் அச்சுறுத்தல் குறித்து முறையிட்டுள்ளனர்.

இதே வேளை ஆரையம்பதிக் கிராமம் நேற்று முன்தினம் பகல் சிறிலங்காப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. முற்பகல் தொடக்கம் சுற்றி வளைப்புத் தேடுதலில் ஈடுபட்ட படையினர் வீடுவீடாக சோதனை செய்ததுடன் வீட்டிலுள்ளோரையும் கடுமையாக விசாரணை செய்தனர்.

இதனால் ஆரையம்பதியூடான போக்குவரத்துக்களும் தடைப்பட்டன. நண்பகல் வரை நீடித்த இந்தச் சோதனை நடவடிக்கையினால் மக்கள் அச்சம் அடைந்தனர்

## சிறுகடல் தொழில் உபகரணங்கள் வழங்கல்

((முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட செம்மலை, செம்மலை கிழக்கு (நாயாறு) கிராம மக்களுக்கு இரண்டாம் கட்ட வேலைத்திட்டத்தில் சிறு கடல் தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நாயாற்று தற்காலிக குடியிருப்பில் அமைந்துள்ள சீற் நிறுவனக் காரியாலயத்தில் நடைபெற்றது.

சீற் நிறுவனத்தின் குல்லா வலைத்தொகுதி வழங்கும் நிகழ்வானது செம்மலை, செம்மீன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மா.அபிமன்னகுமார் தலைமையில் ஆரம்பமானது. மங்கல விளக்கினை சீற் நிறுவன முல்லை மாவட்ட இணைப்பாளர் நிதன், செம்மலை கிழக்கு கிராம அலுவலர் திருமதி.வி.அமிர்தராஜினி ஆகியோர் ஏற்றினார்கள். தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் அளம்பில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார். தொடர்ந்து கருத்துரைகளை செம்மலை கிராம அலுவலர் புஸ்பராசா, செம்மலை கிராம அலுவலர் திருமதி வி.அமிர்தராஜினி, சீற் நிறுவன இணைப்பாளர் நிதன், செம்மலை ஊரக மேம்பாட்டு செயலாளர் செ. மதியழகன் செம்மலை கிழக்கு ஊரக மேம்பாட்டு செயலாளர் மா.உதயகுமார் ஆகியோர் வழங்கினார்கள். 80 குல்லா வலைகளை வருகை தந்த பிரமுகர்கள் வழங்கினார்கள்.20)

## கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் காணி விசாரணைக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நடமாடும் சேவை மூலம் காணி சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி அம்பாள்குளம் கிராம மக்களுக்கான காணி விசாரணைக் கூட்டம் எதிர் வரும் 21 ஆம் திகதியன்று கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்திலும் எதிர் வரும் 22 திகதியன்று வட்டக்கச்சி மாயவனூர், மாவடி அம்மன், இராமநாதபுரம் கிராம மக்களுக்கான காணி விசாரணை கூட்டம் கிராம இராமநாதபுரம் கரைச்சிப் பிரதேச செயலக உப பணிமனையிலும் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரை நடை பெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தி யோகத்தர் செ. ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். ((சோ)

## காலபோக நெற்செய்கை குறித்து கமக்கார அமைப்புக்களின் ஒன்றுகூடல்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேச கமக்கார அமைப்புக்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கி.அமலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காலபோக நெற்செய்கையைக் காலக்கிரமத்தில் ஊக்குவித்தல் தொடர்பாகவும் நெல்சந்தைப்படுத்தல், கால் நடைகளைக் கட்டுப் படுத்தல் போன்ற விடயங்களுக்கான கருத்துக்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அலுவலர் எஸ்.ஆறுமுகம், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. புனிதன் ஆகியோர் வழங்கினர். (24)

## பால் உற்பத்தி வீழ்ச்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் ஏப்ரல், மே மாதங்களில் பால் உற்பத்தி 80 ஆயிரம் லீற்றராகும். ஆனால் கடந்த இரு மாதங்களாக பால் உற்பத்தி 20 ஆயிரம் லீற்றராகக் குறைவடைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளர் கனகராஜா தெரிவித்தார். வெள்ளம் காரணமாக மேய்ச்சல் தரைகள் குறைவடைந்துள்ளமையே இதற்கான காரணமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். கால்நடை சுகாதாரத் திணைக்களமானது கூடிய அக்கறையுடன் செயற்பட்டால் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம் எனத் தெரிவித்த அவர் கொழுப்பின் தரத்தை நிர்ணயிப்பதன் மூலம் பாலுக் குரிய விலையை நிர்ணயிக்கலாம் எனவும் தெரிவித்தார்.



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேற்படி வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதி நேற்றுக் காலை 8.30 மணிக்கு சிகிச்சை பெற வந்திருந்த நோயாளர்களால் நிரம்பி வழிவதை படத்தில் காணலாம். (படம். சோதி)

# இனவாதத்திற்கும் நரிவேடத்திற்கும் தேர்தல் புறக்கணிப்பு மூலம் ஆப்பு வைப்போம்

## தொழில் நுட்ப கல்வி நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

**எம்மினத்தை தொடர்ச்சியாக அடக்கியொடுக்கி வரும் சிறிலங்கா அரசின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களாகிய நாம் முற்றாக புறக்கணிப்போம். என இலங்கை தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

தமிழின அழிப்பையே தனது அரசியல் போக்காகக் கொண்டுள்ள சிங்களக் கட்சிகள் சனாதிபதித்தேர்தலில் பதவி வெறியோடு போட்டியிடுகிறார்கள். இவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத் தீர்வுக்கான எந்த வொரு முன்வைப்புக்களும் இல்லை மாறாக மகிந்த ராஜபக்ஷ இனவாதத்தை வெளிப்படுத் துகிறார். ரணில் நரிவேடம் போடுகிறார். இவர்க ளின் அரசியல் வரலாறு தமிழர்களைக் கொன்று குவித்த இரத்தத்தில் உருவானது. எனவே நாம் இத் தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் சிங்களத் தலைமைகளின் மீது நம்பிக்கையை நாம் இழந்து விட்டோம் என்பதை சர்வதேச உலகுக்கும், தென்பகுதி மக்களுக்கும் எடுத்துக் காட்டும் முகமாகவே அமையும். அத்துடன் சுய நிர்ணய உரிமையுடன் வாழும் நிலைக்கு வந்து விட்டோம். எங்களை அங்கீகரித்து எமது அபிலாசைகளை பூர்த்தி செய்ய உதவுங்கள் என்ற செய்தியை சர்வதேச சமூகத்திற்கு எடுத் துக் கூறுவோம்.

எமது தேர்தல் புறக்கணிப்பைப் பயன்படுத்தி மகிந்தவின் கைக்கூலிகளான ஈ.பி.டி.பியினர் முறைகேடான வாக்குகளை சேகரிக்கும் முகமாக வாக்களிக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட முனைவார்கள் எனத் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் மிகுந்த வழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் உரிமையுடன் வேண்டுகி றோம்.

# ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அளவெட்டியில் வீடமைப்புத் திட்டம்

யாழ். அளவெட்டிக் கிராமத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீடமைப் புத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ள தாக வலிகாமம் வடக்குப் பிரதேசசெயலகம் அறிவித்துள்ளது.

அந்த அடிப்படையில் அளவெட்டிக் கிராமத் தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின கீழ் 25 வீடுகள் முதற் கட்டமாக அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நட வடிக்கைகளால் தமது வீடுகளை இழந்து தற்காலிக வாழ்விடங்களில் தங்கியுள்ள மக்களது நலனைக் கவனத்தில் கொண்டே இவ் 25 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகள் தெரிவுகள் இடப்பெயர்வு, பாதிப்பு இழப்புகள் என்ப னவற்றை அடிப்படையாகக் கொண்டு இடம் பெறவுள்ளன என்று வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

# "நிகொட்" திட்டத்தின் கீழ் யாழ்.இல் விவசாய பயிற்சி நிலையம்

யாழ். மாவட்டத்திற்கான விவசாயப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நிகொட் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இந்த விவசாயப் பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டம் விவசாயிகளை அதிகமாகக்கொண்டதாகக் காணப்படுகின்றபோதும் உழைக்கும் விவசாயிகளுக்கான தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்ற பயிற்சி நிலையம் ஒன்று இல்லாமை பெரும் குறைபாடாகக் காணப்பட்டது.

இந்தக் குறைபாடுகளைத் தீர்க்கும் நோக்குடனேயே இவ் விவசாயப் பயிற்சி நிலையம் நிறுவப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும், தெரி விக்கப்பட்டுள்ளது. (33)

# தேசிய ரீதியில் வெற்றிபெற்ற கிளி. ம.வி. மாணவர்களுக்கு அரச அதிபர் புகழாரம்

அகில இலங்கை ரீதியிலான தமிழ்மொழிக்கலைத்திறன் போட்டியின் நாடக நிகழ்வில் கிளிநொச்சி ம.வி. மாணவர்கள் முதலிடம் பெற்றதையிட்டு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி கலைத்திறன் நாடக நிகழ்வுப் போட்டியிலேயே கிளிநொச்சி ம.வி. மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றனர்.

இந்த வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் நேற்றையதினம் தேநீர் விருந்தளித்துப் பாராட்டும், பரிசிலும் வழங்கிக் கௌரவித்ததுடன் தமது பணிமனை சார்பாக வெற்றிக் கிண்ணம் ஒன்றினை வித்தியாலய முதல்வர் வ. யோகநாதனிடம் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த இராசநாயகம் "பல்வேறு வளப்பற்றாக்குறைகளின் மத்தியிலும் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற உங்களின் சாதனை பாராட்டுக்குரியது என்றும், இவ்வாறானதொரு சாதனை இதுவரை காலமும் நிலைநாட்டப்படவில்லையென்றும், நீங்கள் இச்சாதனையை நிறைவேற்றியமை மகிழ்ச்சிக்குரியது" என்றும் பாராட்டினார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், நாடக இயக்குநர் க.விஜயசேகரன், ஆசிரியர்கள், மாணவர்கள், கச்சேரி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# இலக்கத்தகடற்ற வாகன நடமாட்டம் தென்மராட்சி மக்கள் மத்தியில் பதற்றம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக இரு இலக்கத் தகடு அகற்றப்பட்ட வாகனங்கள் இரவு நேரத்தில் வெளிச்சம் அணைக்கப்பட்ட நிலையில் நடமாடி வருவதாக இப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், வரணிப் பகுதியில் இத்தகைய வாகனம், கண்ணாடிகள் சாத்தப்பட்ட நிலையில் கடும் வேகத்துடன் சென்று வருவதாகவும், அந்த வாகனத்தினுள் பத்துபேர் வரையான ஆயுதபாணிகள் இராணுவ மற்றும் சிவில் உடைகளில் இருப்பதாகவும், பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (23)

# தொழில் உரிமை மீறல்கள் குறித்து தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யலாம்

தொழில் வழங்குனர்களினால் ஏற்படுத்தப் படும் தொழில் உரிமை மீறல்கள் குறித்து பாதிக்கப்படும் தொழிலாளர்கள் யாழ். மாவட்டத் தொழில் திணைக்களத்தில் முறையீடு செய்ய லாம்.

இவ்வாறு யாழ். மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் கனகேஸ் வரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களது கொடுப்பனவு, மற்றும் விடுமுறை ஓய்வுச் சலுகைகள் உள்ளிட்ட பல விடயங்களில் தொழில் வழங்குனர்களால் பல்வேறு உரிமை மீறல்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

எனினும் தம் மீதான உரிமை மீறல்கள் பற்றி முறையிட்டு சரியான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கான வழி வகைகள் தெரியாது பல தனியார் நிறுவன ஊழியர்கள் தவிக்கின்ற னர்.

எனவே இவ்வாறான தொழில் உரிமை மீறல்களுக்கான தீர்வினைப் பெறவிரும்புவோர் தமது குறைபாடுகள் பற்றி யாழ். மாவட்ட தொழில் திணைக்களத்தில் முறையிட்டால் சரியான தீர்வுகளைப் பெற சகல ஏற்பாடுகளை யும் தொழில் திணைக்களம் மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (33)

# கிராம உத்தியோகத்தர் பற்றாக்குறை போக்க நடவடிக்கை வேண்டும்

## கடற்றொழிலாளர் சங்கங்கள்

வடமராட்சி பிரதேச கடற்கரையோர கிராமங்களில் நிலவும் கிராம உத்தியோகத்தர் பற்றாக்குறைகளைப் போக்க உடனடியாக நட வடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வட மராட்சியில் உள்ள கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வடமராட்சியில் உள்ள கடற்கரையோரக் கிராமங்களில் சுமார் 20 இற்கும் மேற்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்கள் உள்ளன.

இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர கிராம வாழ். கடற்றொழில் மக்களுக் கான நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல சிக்கல்கள் தோன்றி யுள்ளது.

இது மக்கள் மத்தியில் நிவாரண பகிர்வு, உதவித் திட்டப் பகிர்வு என்பனவற்றிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டியே வடம ராட்சி கடற்றொழிலாளர் சங்கங்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன. (33)

# முறைப்பாடு செய்ய செல்லும் பொது மக்கள் மீது சிறிலங்கா பொலிசார் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலை யங்களில் முறைப்பாடு தெரிவிக்கச் செல்லும் பொதுமக்கள் மீது சிறிலங்காப்பொலிசார் கடுமையான கெடுபிடிகளை மேற்கொள்வதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள பொலிசார் மீது இனம் தெரியாத நபர்கள் திடீ திடீரெனத் தாககுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதில் பொலிஸ் தரப்பு சேதங்க ளையும் இழப்புச் [illegible]யும் சந்தித்துள்ளனர்.

இதனால் [illegible] டைந்துள்ள பொலிசார் அப்பாவிப் பொதுமக்கள் மீது பழிவாங்கும் நோக்கில் நடந்து கொள்வதாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

சிறுசிறு குற்றச்சாட்டுகள், சந்தேகங்கள், என்பனவற்றில் கைது செய்யப்படுபவர் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்வோரை பொலிசார் தாக்கித் துன்புறுத்துவதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். இதைவிட பொலிஸ் நிலையங்களுக்குச் செல்வோரை தகாத வார்த்தைகளால் ஏசியும் முறைப் பாடு பெறாது அவர்களை ஏமாற்றியும் பொலிசார் நடந்து கொள்கின்றனர். இதனால் அப்பாவிப் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் வேப்பம்புலவு கிராமமக்கள்

யாழ். புத்தூர் வடக்கு வேம்பம்புலவு கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் அவலவாழ்வு வாழ்ந்து வருகின் றனர்.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 400 இற்கும் அதிகமான குடும்பங்கள் இக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வாழ்வோருக்கு திருப்திகரமான இருப்பிட வசதிகளோ, சுகாதார வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ இல்லாதிருக் கின்றது.

எனினும் இங்கு வாழ்கின்ற இடம் பெயர்ந்த மக்களது நலன்களை கவனத்திற்கொண்டு எந்த விதமான அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கை களையும் அமுல்படுத்த அரச செயலகமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனமோ முன் வரவில்லை.

இதனால் இக் கிராம வாழ் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி தொடர்ந் தும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ஆர்வமற்ற மக்களின் தீர்ப்பு?

பீகார் கனகச்சிதமாக மூன்றாம் கட்டத் தேர்தலை சந்தித்துள்ளது. இன்னும் ஒரே யொரு கட்டம்தான் பாக்கி. அதுவும் நடந்து முடிந்து விடுமானால் பீகார் மாநிலம் யார் கையில்..? என்பது தெரிந்துவிடும். அதன் பின்னர் பீகாரில் யார் ஆட்சியமைத்து கோலோச்சப் போகின்றவர்கள்...யார் யாரெல்லாம் முகத்தில் முக்காடு போட்டுக்கொண்டு தலைமறைவாகப் போகின்றவர்கள் எனும் சுவாரசியமான விடயங்களெல்லாவற்றையும் கூட இம் மாத இறுதியினுள் பீகார் கண்டு விடும் என்பதில் சந்தேகமில்லை.

மூன்றாம் கட்டத்தேர்தலில் 57 தொகுதிகளில் 46 சதவீதமான வாக்குகளே மக்களால் அளிக்கப்பட்டுள்ளதாக பீகார் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது. முதலாம், இரண்டாம் கட்டத்தேர்தல் போலவே தான் மூன்றாம் கட்டமும் சோபை இழந்து காணப்பட்டிருக்கின்றது என்பதற்கு வாக்கு சதவீதம் எடுத்துக் காட்டத்தவறில்லை எனலாம்.

இதேவேளை 57 தொகுதிகளிலும் 131 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அதிலும் ஐந்து பேர் வேட்பாளர்கள் என்பது மிகுந்த கவலைக்குரிய விடயமே. ஏனெனில் வேட்பாளர்களே தேர்தலின் வெற்றிக்காக தவறான வழிகளில் பின்பற்றிச் சென்றமையே அவர்களது கைதுக்குப் பிரதான காரணமன்றி வேறில்லை எனலாம்.

அத்துடன் 57 தொகுதிகளில் 131 பேர் கைது எனில் ஒவ்வொரு தொகுதியும் நல்ல முறையில் அதாவது தேர்தல் விதி முறைகளுக்கமைய தேர்தலில் ஈடுபட வில்லை. அதன் கட்சியினரோ அல்லது வேட்பாளர்களோ கூட நம்பகத்தை ஏற்படுத்த வில்லையே... என்றுதான் கூறவேண்டும்.

இதற்குக் காரணம் ஒன்றுள்ளது. ஒவ்வொரு கட்சியுமே பீகாரை தமது கைக்குள் போட்டு விட வேண்டும் தாமே



சோனியா



நட்வர்சிங்

பீகாரில் முடிசூடா மன்னராக காலம் தள்ள வேண்டும் என்று மனப்பால் குடிக்கின்றன. அதனால் தமது கனவை நிஜமாக்க தகுடுதத்தங்களை நாடுகின்றன. ஏனெனில் வெற்றி மட்டுமே அக்கட்சிகளுக்கு முன்னால் தெரிகின்றது. ஏனைய விதிமுறைகளையோ மக்கள் மன நிலைகளையோ அவர்கள் பொருட்படுத்தவில்லை போலும். இல்லையேல் இவ்வாறானநிலை தோன்றி யிருக்க வாய்ப்பே இல்லையே!

முதலாம், இரண்டாம் கட்டமும் கூட மிகுந்த பரபரப்பும் அச்சநிலையிலும் தான் நடந்து முடிந்தது. அதேபோல் மூன்றாம் கட்டமும் பலத்த பாதுகாப்பின் மத்தியில் தான் முடிந்திருக்கின்றது. இன்னும் நான்காம் கட்டத்தில் எவ்வாறான பாதுகாப்புகளுக்கு இடமிருக்கப் போகின்றதோ தெரியவில்லை.

ஏனெனில் ஏற்கனவே பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் பிரச்சாரத்தின்போது மேடையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அதுமட்டுமன்றி லல்லுபிரசாத்யாதேவை சுடுவதற்கு மேடைநோக்கி நகர்ந்த சந்தேகநபர் பிடிபட்டுள்ளார். இதனால் தான் மூன்றாம் கட்டத்தேர்தல் பிரச்சாரத்தில் லல்லு மிகுந்த அச்சரேகையுடனேயே களமிறங்கியிருந்தார். ஏற்கனவே எவரென்று தெரியாத மர்மமனிதரால் பாரதிய ஜனதா உறுப்பினர் கொல்லப்பட்டிருக்கின்றார். தமக்கோ குறிபார்க்கப்பட்டு தவறி விட்டிருக்கின்ற நிலையில் உயிர்ப்பயம் எவருக்கும் இயல்பாக இருக்கையில் லல்லு பிரசாத் யாதேவ் மட்டும் விதிவிலக்கு ஆகுவதென்பது நடக்கக்கூடியதொன்றல்லவே!

இதனால்தான் மூன்றாம் கட்டத்தேர்தல் பிரச்சாரத்தில் லல்லு உட்பட எல்லாக் கட்சியினரும் மிகுந்த கலவரத்தின் மத்தியில்தான் பிரச்சாரம் செய்தனர். ஆனால் தமது பீதியை வெளியே காட்டிக்கொள்ளவில்லையே தவிர அச்சரேகை இல்லாது இருந்திருக்க வாய்ப்பே இல்லை எனலாம்.

என்றாலும் கடந்த பெப்ரவரியில் நடந்த தேர்தல்போல் இம்முறை இல்லை என்பதைக் கூறத்தான் வேண்டும். கடந்த தேர்தலின்போது மக்களின் விருப்பு வெறுப்பு வெளித்தெரிந்தது. இம்முறையோ மக்கள் இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன எனும் நிலையில்தான் வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்பதை வாக்களிப்பின் சதவீதம் எடுத்துக் காட்டத் தவறவில்லை எனலாம்.

இனிப் போட்டியிடும் கட்சியின் நிலவரங்களைநோக்கின்.... பீகாரில் 14 தொகுதிகள் எவ்வித ஐயப்பாடுமின்றி இதுவரை காலமும் லல்லு பிரசாத் வசமே ஆகியிருக்கின்றது. யாதேவ், முஸ்லிம் மக்களே இத்தொகுதியில் வாழ்வதால் தமது ஆபத்பாந்தவனாக லல்லுவை நம்பி வந்தனர்.

ஆனால் இந்தநிலை கடந்த பெப்ரவரித் தேர்தலில் இல்லாது போய்விட்டது லல்லு முடிசூடா மன்னனாக இருந்த 14 தொகுதிகளில் பஸ்வானும் புகுந்துவிட்டதால், லல்லு முடியை இழக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது எனலாம் கடந்த 15 ஆண்டு காலமாக பீகாரின் அரண்மனை இராச்சியமாகவும் அதன் அதிபதியாகவும் லல்லுவும் அவரது மனைவி ராப்பரி தேவியுமே இருந்து வந்தமை தெரிந்த விடயமே.

மாறாக கடந்த பெப்ரவரித் தேர்தலுடன் குடும்ப அரசியல் அஸ்தமனமாகி துண்டு துண்டாகிவிட்டது. 2000 ஆம் ஆண்டில் 11 மாவட்டங்களில் 72 தொகுதிகளில் 38 தொகுதிகளை தனித்துப் பெற்றவர் லல்லு பிரசாத் யாதேவ் ஆனால் கடந்த பெப்ரவரித் தேர்தலில் 21 தொகுதிகளே இவரது வசமாகியது என்பது கவனிக்கத்தக்கது.

ஏனெனில் பஸ்வானும் பாரதிய ஜனாதா-ஐக்கிய ஜனதா தள கூட்டணியும் ஏனைய இடங்களை தம்வசமாக்கிக் கொண்டன. இதற்கு அவர்களது கொள் கைகளே காரணம் என்று கூறப்பட்டது.

எப்படியென்றாலும் முதலாம், இரண்டாம் கட்ட தேர்தலின் கருத்துக் கணிப்பின்படி இம்முறையும் லல்லு பிரசாத் மண்கவ்வக் கூடும்..(?) என்றே கூறப்படுகின்றது.

இதனால் மூன்றாம் கட்டப் பிரச்சாரத்தில் விட்டதைப் பிடிப்பதற்காக எதையும் செய்யலாம் எனும் நிலையினை லல்லு எடுத்துக்காட்டியிருக்கின்றார் போலும்.

இல்லையேல் சாதி, மற்றும் மதம் குறித்து அலட்டிக்கொள்ளாத லல்லு மூன்றாம் கட்டப் பிரச்சாரத்தில் முதன்மைப் படுத்திய விடயங்களே இவை இரண்டையும்தான் என்பது குறிப்பிடத் தக்கதொன்று.

மதசார்பின்மை,மதசார்பற்ற கொள்கை என்றெல்லாம் பேசிவந்த லல்லுபிரசாத் இப்போதோ அதையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு விட்டார். மதசார்பற்றவர் எனும் நிலைமாறி மதவாதி என்று கூறுமளவிற்கு அவரது பிரச்சாரம் பட்டை கிளப்புகின்றது எனலாம்.

முஸ்லிம் மக்கள் பஸ்வானின் கருத்துக் களை நம்பவேண்டாம் என்று நேரடியாகக் கூட்டங்களில் பேசிவரும் லல்லு பிரசாத் யாதேவ், முஸ்லிம் மக்களுக்கு சலுகை களை அள்ளிவழங்கி வருகின்றார். இல்லையேல் கடந்த இரண்டு கட்டத்தேர்தலின் போது மூன்றே மூன்று கூட்டங்களை தொகுதிகளில் நடத்திய லல்லு மூன்றாம்



லல்லு

கட்டப் பிரச்சாரத்தில் எட்டுப் பொதுக் கூட்டங் களைப் நடத்தி மக்களை அதிசயப்பட வைத் துள்ளார்.

அது மட்டுமன்றி, பீகாரில் சாதிப் பிரச்சினையும் தலைதூக்கி வருகின்றமையினால் அதனையும் எல்லாக் கட்சிகளும் பயன்படுத்துவதில் முன்நிற்கின்றன. ஒவ்வொரு சாதியினருக்கும் பாடுபடப் போவதாக அங்கு ஏற்கனவே ஓராயிரம் கட்சிகளும், அமைப்புகளும், உருவாகி இருக்கின்றன. இந்த சாதி வெறி பீகாரில் இப்போது பிரதான கட்சிகளையும் பீடித்திருக்கின்றதாகக் கூறப்படுகின்றது.

| 30 | யா/புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம். | யா/யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் (மண்டப இல.04) |
| 32 | யா/சன்மார்க்க மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம். | யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம். (மண்டப இல.03) |
| 35 | யா/வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம். | யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம். (மண்டப இல.04) |
| 38 | யா/ஒஸ்மானியாக் கல்லூரி, யாழ்ப்பாணம். | யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி, வண்ணார் பண்ணை, (மண்டப இல.05) |
| 41 | நாவாந்துறை சென்ற்,நிக்கலஸ் சனசமூக நிலையம். | யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி, வண்ணார் பண்ணை (மண்டப இல.06) |

## வாக்கெடுப்பு பிரிவு "க" கிளிநொச்சி

| வாக்கெடுப்பு மாவட்ட இல | உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் குறிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம். | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய வாக்கெடுப்பு நிலையம் |
|---|---|---|
| 01 | கி/ வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/01,முகமாலை. |
| 02 | கி/ ஆனை விழுந்தான்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/02,முகமாலை. |
| 03 | கி/ கண்ணைகைபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/03,முகமாலை. |
| 04 | கி/ ஸ்கந்தபுரம் இல.02 அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/04,முகமாலை. |
| 05 | கி/ அக்கராயன்குளம் மகாவித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/05,முகமாலை. |
| 06 | கி/ அக்கராயன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/06,முகமாலை. |
| 07 | கி/ சிவபாத கலையகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அறிவியல்நகர். | தற்காலிக கொட்டகை இல.க/07,முகமாலை. |
| 08 | கி/ பாரதி வித்தியாலயம், பாரதிபுரம். | தற்காலிக கொட்டகை இல.க/08,முகமாலை. |
| 09 | மலையாள புரம் பொதுநோக்கு மண்டபம். | தற்காலிக கொட்டகை இல.க/09,முகமாலை. |
| 10 | விவேகானந்தநகர் பொது மண்டபம். | தற்காலிக கொட்டகை இல.க/10,முகமாலை. |
| 11 | கிருஸ்ணபுரம் பொது மண்டபம் | தற்காலிக கொட்டகை இல.க/11,முகமாலை. |
| 12 | உதய நகர் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் | தற்காலிக கொட்டகை இல.க/12,முகமாலை. |
| 13 | உதய நகர் மேற்கு கிராம அபிருத்திச் சங்கம். | தற்காலிக கொட்டகை இல.க/13,முகமாலை. |
| 14 | ஆனந்தநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் | தற்காலிக கொட்டகை இல.க/14,முகமாலை. |
| 15 | கி/ செல்வாநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/15,முகமாலை. |
| 16 | கி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி | தற்காலிக கொட்டகை இல.க/16,முகமாலை. |
| 17 | தொண்டமான்நகர் பொது மண்டபம். | தற்காலிக கொட்டகை இல.க/17,முகமாலை. |
| 18 | கி/ கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/18,முகமாலை. |
| 19 | கி/ சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/19,முகமாலை. |
| 20 | கி/ திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்கம் | தற்காலிக கொட்டகை இல.க/20,முகமாலை. |
| 21 | திருவையாறு மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல.க/21,முகமாலை. |
| 22 | இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் | தற்காலிக கொட்டகை இல.க/22,முகமாலை. |
| 23 | கி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/23,முகமாலை. |
| 24 | கி/ பன்னங்கண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/24,முகமாலை. |
| 25 | கி/புனித அந்தோனீஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பன்னங்கண்டி | தற்காலிக கொட்டகை இல.க/25,முகமாலை. |
| 26 | கி/ கனகபுரம் மகாவித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/26,முகமாலை. |
| 27 | திருநகர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம். | தற்காலிக கொட்டகை இல.க/27,முகமாலை. |
| 28 | திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம். | தற்காலிக கொட்டகை இல.க/28,முகமாலை. |
| 29 | கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம். | தற்காலிக கொட்டகை இல.க/29,முகமாலை. |
| 30 | கி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி. | தற்காலிக கொட்டகை இல.க/30,முகமாலை. |
| 31 | கி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி. | தற்காலிக கொட்டகை இல.க/31,முகமாலை. |

## வாக்கெடுப்பு பிரிவு "க" கிளிநொச்சி

| வாக்கெடுப்பு மாவட்ட இல | உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் குறிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம். | தற்பொழுதுசென்று வாக்களிக்க வேண்டிய வாக்கெடுப்பு நிலையம் |
|---|---|---|
| 32 | எள்ளுக்காடு பொதுமண்டபம். | தற்காலிக கொட்டகை இல.க/32,முகமாலை. |
| 33 | கி/புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை உருத்திரபுரம். | தற்காலிக கொட்டகை இல.க/33,முகமாலை. |
| 34 | கி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/34,முகமாலை. |
| 35 | கி/சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/35,முகமாலை. |
| 36 | கி/ஊற்றுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/36,முகமாலை. |
| 37 | கி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/37,முகமாலை. |
| 38 | கி/வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/38,முகமாலை. |
| 39 | கி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல.க/39,முகமாலை. |
| 40 | கி/மாயவனூர் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல.க/40,முகமாலை. |
| 41 | கி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல.க/41,முகமாலை. |
| 42 | கி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/42,முகமாலை. |
| 43 | கி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம் (மண்டப இல.01) | தற்காலிக கொட்டகை இல.க/43,முகமாலை. |
| 44 | கி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம் (மண்டப இல.02) | தற்காலிக கொட்டகை இல.க/44,முகமாலை. |
| 45 | கி/உமையாள்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/45,முகமாலை. |
| 46 | கி/ஆனையிறவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/46,முகமாலை. |
| 47 | கி/கண்ணகை அம்மன் வித்தியாலயம், தட்டுவன் கொட்டி. | தற்காலிக கொட்டகை இல.க/47,முகமாலை. |
| 48 | கி/கோரக்கன்கட்டு பாலர் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/48,முகமாலை. |
| 49 | ஊரியான் பொதுநோக்கு மண்டபம். | தற்காலிக கொட்டகை இல.க/49,முகமாலை. |
| 50 | கி/முரசுமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/50,முகமாலை. |
| 51 | கி/கண்டாவளை மகாவித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/51,முகமாலை. |
| 52 | கி/ஐயனார்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/52,முகமாலை. |
| 53 | கி/இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/53,முகமாலை. |
| 54 | கி/தர்மபுரம் மகாவித்தியாலயம் (மண்டப இல.01) | தற்காலிக கொட்டகை இல.க/54,முகமாலை. |
| 55 | கி/தர்மபுரம் மகாவித்தியாலயம் (மண்டப இல.02) | தற்காலிக கொட்டகை இல.க/55,முகமாலை. |
| 56 | கி/கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/56,முகமாலை. |
| 57 | கி/புன்னை நீராவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/57,முகமாலை. |
| 58 | கி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/58,முகமாலை. |
| 59 | நல்லூர் பொது நோக்கு மண்டபம் | தற்காலிக கொட்டகை இல.க/59,முகமாலை. |
| 60 | கி/பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல.க/60,முகமாலை. |
| 61 | கி/செல்லையா தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/61,முகமாலை. |
| 62 | கி/கறுக்காய் தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/62முகமாலை. |
| 63 | கி/ஞானிமடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல.க/63,முகமாலை. |
| 64 | கி/அத்தாய் முத்துக்குமாரசாமி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க64,முகமாலை. |
| 65 | கி/பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல.க/65,முகமாலை. |
| 66 | கி/பூநகரி மகாவித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/66,முகமாலை. |
| 67 | கி/பரமன் கிராய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/67,முகமாலை. |
| 68 | கி/கௌதாரிமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/68,முகமாலை. |
| 69 | கி/ஜெயபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/69,முகமாலை. |
| 70 | ஜெயபுரம் தெற்கு பொது நோக்கு மண்டபம். | தற்காலிக கொட்டகை இல.க/70,முகமாலை. |
| 71 | கி/கரியாலை நாகபடுவான் இல.02 பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/71,முகமாலை. |
| 72 | கி/கரியாலை நாகபடுவான் இல.03 பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/72,முகமாலை. |
| 73 | கி/முழங்காவில் மகாவித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/73,முகமாலை. |
| 74 | கி/நாச்சிக்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/74,முகமாலை. |
| 75 | கி/கிராஞ்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/75,முகமாலை. |
| 76 | கி/வேரவில் இந்து மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல.க/76,முகமாலை. |
| 77 | கி/இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/77,முகமாலை. |
| 78 | கி/கோவில் வயல் இலங்கை கிறிஸ்தவாலய தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/78,முகமாலை. |
| 79 | கி/இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/79,முகமாலை. |
| 80 | ஊர்வணிக்கம்பற்று சனசமூக அபிவிருத்தி நிலையம். | தற்காலிக கொட்டகை இல.க/80,முகமாலை. |
| 81 | கி/மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/81,முகமாலை. |
| 82 | கி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம். | தற்காலிக கொட்டகை இல.க/82,முகமாலை. |
| 83 | கி/தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/83,முகமாலை. |
| 84 | கி/பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/84,முகமாலை. |
| 85 | முல்லையடி கிராம அபிவிருத்திச் சங்கம் | தற்காலிக கொட்டகை இல.க/85,முகமாலை. |
| 86 | தம்பகாமம் கிராம அபிவிருத்திச் சங்கம். | தற்காலிக கொட்டகை இல.க/86,முகமாலை. |
| 87 | கி/பளை மத்திய கல்லூரி | தற்காலிக கொட்டகை இல.க/87,முகமாலை. |
| 88 | புலோப்பளை மேற்கு சென்மேரிஸ் சனசமூக நிலையம். | தற்காலிக கொட்டகை இல.க/88,முகமாலை. |
| 89 | கி/அல்லிப்பளை இலங்கை கிறிஸ்தவாலய தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/89,முகமாலை. |
| 90 | செல்வபுரம் சனசமூக நிலையம். | தற்காலிக கொட்டகை இல.க/90,முகமாலை. |
| 91 | அரசர்கேணி வளர்பிறை சனசமூக நிலையம். | தற்காலிக கொட்டகை இல.க/91,முகமாலை. |
| 92 | கி/வேம்பொடுகேணி இலங்கை கிறிஸ்தவாலய தமிழ் கலவன்பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/92முகமாலை. |
| 93 | கி/முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/93,முகமாலை |
| 94 | வேம்பொடுகேணி கிராம அபிவிருத்திச் சங்கம். | தற்காலிக கொட்டகை இல.க/94,முகமாலை. |
| 95 | கி/கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. | தற்காலிக கொட்டகை இல.க/95,முகமாலை. (சி.13273) |



முழங்காலில் உபாதைக்குள்ளான இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல்வோன் உடல் தகுதியைப் பெற்றுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் மைக்கல்வோன்.

## பட்டம் வென்றார் மவுரஸ்மோ

அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற டென்னிஸ் போட்டி நடைபெற்றது. இதன் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த உலகின் நான்காம் நிலை வீராங்கனையான அமேலி மவுரஸ்மோ, சகநாட்டு வீராங்கனையான மேரிபியர்சுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் மவுரஸ்மோ 5-7, 7-6, 6-4 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

## இரட்டைச் சதத்தை தவறவிட்டார் ரெஸ்கொதிக் இங்கிலாந்து முதல் இனிங்சில் 418 ஓட்டம்

முல்டானில் நடைபெற்றுவரும் பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்சில் இங்கிலாந்து அணி 418 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணித்தலைவர் மார்கஸ் ரெஸ்கொதிக் ஏழு ஓட்டங்களால் இரட்டைச் சதம் பெறும்



வாய்ப்பைத் தவறவிட்டார்.

மூன்று விக்கெட் இழப்புக்கு 253 ஓட்டங்களுடன் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 418 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டையும் இழந்தது.



துடுப்பாட்டத்தில் ரெஸ்கொதிக் 193, பெல் 71, பிளின் டொப் 45, ஜோன்ஸ் 22 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.


பந்துவீச்சில் அகமட் நான்கு விக்கெட்டுக் களையும், அக்தர் மூன்று விக்கெட்டுக்களையும், சமி,கனேரியா, மலிக் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

144 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடும் பாகிஸ்தான் 125 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டை இழந்துள்ளது. பாகிஸ்தான் முதல் இனிங்சில் 274. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.



ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் பிரிமியர் ஷிப் கால்பந்துப் போட்டியில் மான்யுனைற்டெட் அணிக்காக ஆடும் இங்கிலாந்து கால்பந்து அணியின் வெயின்ரூனி கோல் அடிக்க முயற்சிப்பதையும் எதிரணி வீரர் தடுக்க முயற்சிப்பதைக் காணலாம்.



முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற லொஸ்ஏஞ்சல்ஸ் டெனிஸ் இறுதிப்போட்டியில் பங்கேற்ற பிரான்ஸ் வீராங்கனைகள் வெற்றிக்கிண்ணத்துடன்.

## டோனியைப் பற்றி கவலையில்லை சச்சின்தான் எங்களுக்குச் சவால்

"இந்திய அணியில் பரபரப்பூட்டி வரும் மகேந்திரசிங் டோனி குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. மீண்டும் அணிக்குத் திரும்பி ஓட்டங்களை விளாசிவரும் சச்சின் டெண்டுல்கர் குறித்தே நாங்கள் அச்சப்படுகிறோம்" என்று தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் மைக்கி ஆர்தல் கூறியுள்ளார்.

இந்தியாவுடன் ஐந்து ஒரு நாள் தொடரில் பங்கேற்க வந்துள்ள தென்னாபிரிக்க அணி ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் வலைப் பயிற்சியில் ஈடுபட்டது.

அப்போது நிருபர்களிடம் ஆர்தர் மேலும் கூறியதாவது, இலங்கைக்கு எதிரான தொடரில் இந்தியா மகத்தான வெற்றிகளைக் குவித்தது குறித்தும் நாங்கள் கவலைப்படவில்லை. இப்போது உலகின் சிறந்த இரண்டாவது கிரிக்கெட் அணியாக நாங்கள் விளங்குகின்றோம்.

ஆக அந்த இடத்தைத் தக்கவைத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பது எமக்கும் தெரியும். அதற்கான திட்டங்களுடன்தான் இந்திய மண்ணில் கால் பதித்துள்ளோம். அதனாலேயே இது சவால் நிறைந்த தொடராகவும் இருக்கும்.

அண்மையில் நியூசிலாந்தைத் தோற்கடித்தோம்.இப்போது இந்திய அணியை எதிர்கொள்கிறோம். அடுத்ததாக எமது இலக்கு அவுஸ்திரேலியா சென்று அனைத்திலும் வெற்றிகு[illegible]தே எமது இலட்சியம்.

தலைவர் ராகுல்ராவிட் பயிற்சியாளர் கிரேக் சப்பல் தலைமையிலான இந்திய அணி உண்மையிலேயே நன்றாக வேலை செய்கிறது என்பதை மறுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

## இங்கிலாந்து அணிக்கு தலைவரானால் மகிழ்ச்சியடைவேன்



-பிளின்டொப

இங்கிலாந்து அணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டால் மகிழ்சசி அடைவேன். ஆனால், இப்போது அந்தப் பதவியில் விருப்பமில்லை" என்கிறார் சகலதுறை வீரர் ஆன்ரு பிளின்டொப்.

முல்தானில் நடந்து வரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து அணிக்குத் தலைவராக மார்கஸ் ரெஸ்கொதிக் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் பத்திரிகையாளர் ஒருவர் பிளின்டொப்பிடம் "அடுத்த தலைவராக ஆசையா" என்று கேட்க அவர் தனது ஆசையைக் கொட்டிவிட்டார்.

தனது பேட்டியில் பிளின்டொப் தெரிவித்துள்ளதாவது:

இங்கிலாந்து அணிக்குத் தலைவராக நியமித்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். அதற்கு நீண்ட நாட்கள் உள்ளன. இப்போது அதை நினைத்துப் பார்ப்பது தவறு. குறுகிய கால அடிப்படையில் இதை ஏற்க விரும்பவில்லை. நீண்ட ஆண்டுகள் இந்தப் பதவியில் இருக்க வேண்டும்.

இப்போது எனது விருப்பமெல்லாம் இதுதான். ஒரு சகலதுறை வீரராக அதிக ஓட்டங்கள், விக்கெட்டுக்களை எடுத்து அணிக்கு உபயோகமாய் இருக்க வேண்டும். வோன் தலைமையிலான அணிக்கு நிறைய வெற்றிகள் தேடித்தர வேண்டும். காயம் காரணமாக அணியை விட்டு ஒதுங்கி இருக்கும் வோனுக்கு இப்போது நாங்கள் ஆதரவாக இருக்க வேண்டும். அவர் ஒரு சிறந்த தலைவர் மட்டுமல்ல... சிந்தனை வாதியும்கூட. அவர் இல்லாவிட்டாலும் கூட, கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கள் அணி பெற்ற வெற்றிப்பாதையைக் கண்டறிந்து அதன்வழி செல்வோம். தலைவர் பதவிக்கு ரெஸ்கொதிக்கும் பொருத்தமானவர்தான். வோன் தலைமைக்கு எந்தவிதத்தில் ஒத்துழைத்தோமோ அந்த ஆதரவு இவருக்கும் கண்டிப்பாகக் கிடைக்கும்.

இவ்வாறு தனது பேட்டியில் தெரிவித்துள்ளார் பிளின்டொப்.

## இந்திய-பாகிஸ்தான் தொடருக்கான நடுவர்கள் ஐ.சி.சி யால் அறிவிப்பு

அடுத்த ஆண்டு தொடங்கவுள்ள இந்தியா, பாகிஸ்தான் தொடருக்கான நடுவர்களை ஐ.சி.சி.அறிவித்துள்ளது.



இந்திய கிரிக்கெட் அணி ஐந்து ஒருநாள் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட அடுத்த ஆண்டு சனவரியில் பாகிஸ்தான் செல்கிறது. இத்தொடருக்கான அட்டவணை மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி). நடுவர்களை அறிவித்துள்ளது.

கராச்சி (சன-5-9), லாகூர் (சன 14-18) ஆகிய முதல் இரண்டு டெஸ்ட் போட்டிக்[illegible]ரூடி குயர்ட்சன் (தெ.ஆ.), நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் முதல் டெஸ்டில் டேரல் ஹார்பரும் (ஆஸி) இரண்டாவது டெஸ்டில்டேரல் ஹேயரும் (ஆஸி), இணைந்து பணியாற்றுவர்.

ராவல்பிண்டியில் நடக்கும் மூன்றாவது டெஸ்டில் (சன-22-26) டேரல்ஹேர், சைமன்டபெல் (ஆஸி) நடுவராக இருப்பர். ஒருநாள் தொடரின் ஐந்து போட்டிகளுக்கும் அவுஸ்திரேலியாவின் சைமன் டபெல் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருடன் இணைந்து செயலாற்ற பாகிஸ்தானின் உள்ளூர் நடுவர்கள் விரைவில் தேர்வு செய்யப்படுவர் டெஸ்ட் தொடருக்கு இலங்கையின் ரஞ்சன் மடுகல்லவும், ஒருநாள் தொடருக்கு இங்கிலாந்தின் கிறிஸ் பிராடும் போட்டி நடுவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பிளமிங் பயிற்சியாளர் கருத்து முரண்பாடு மறுக்கின்றார் பயிற்சியாளர் பிரஸ்வல்

அண்மையில் தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணியில் கிறிஸ்கெயான்சை இணைத்துக்கொள்ளாமை தொடர்பில் தனக்கும் அணித்தலைவர் பிளமிங் குக்குமிடையில் கருத்து மோதல் உருவாகியுள்ளதாக வெளியான வதந்தியை அவ்வணியின் பயிற்றுநர் ஜோன் பிரஸ்வெல் நிராகரித்துள்ளார்.

சுற்றுப்பயணம் புறப்பட முன்பு கிறிஸ் கெயான் தனது உடற்தகுதியை நிரூபிக்க வேண்டும் என்ற விவகாரத்தில் இருவருக்குமிடையில் குழப்பநிலை தோன்றியதாக வெலிங்டன் பத்திரிகைகள் செய்திவெளியிட்டன. இதனை மறுத்துள்ள பிரஸ்வல் தற்போது கெயான்ஸ் உடல்நலத்துடன் இருப்பதாகவும் அவுஸ்திரேலியாவுடனான போட்டிக்குத் தயார் நிலையிலிருப்பதாகவும் கூறினார்.

கெயான்ஸ் 2004 ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றதுடன், வரும் 2007 உலகக்கிண்ணம் வரை ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்து-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் ஒருநாள் போட்டி வரும் டிசம்பரில் நடைபெறும்.

## மேற்கிந்தியத்தீவுக்கு ஐ.சி.சி .பாராட்டு




2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கிந்தியத் தீவுகள் செய்து வருவதையிட்டு சர்வதேச கிரிக்கெட் சபை மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

யமேக்காவில் நடைபெறும் மூன்று நாட்கள் கொண்ட கூட்டத்தின் இரண்டாம் நாள் சந்திப்பின்போது சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் தனது மகிழ்ச்சியை வெளியிட்டார்.

12 அணிகள் போட்டியிடும் இத் தொடரில் 51 போட்டிகள் 47 நாட்களாக நடைபெறும். போட்டி 2007 மார்ச் 13 ஆம் திகதி முதல் ஏப்ரல் 28 ஆம் திகதிவரை நடைபெறும்.

இந்தப் போட்டிகளுக்காக அன்டிகுவா, கயானா, பார்படோஸ், கிரனடா, யமேக்கா, செனகிட்ஸ் சென்லூசியா ரினிடாட் மைதானங்கள் தரமுயர்த்தப்பட்டு புதுப்பொலிவு பெற்று வருகின்றது.

## துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக்காததே இலங்கையணியின் தோல்விக்குக் காரணம்

-தெரிவுக்குழுத்தலைவர்



இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக்காமையே இந்திய அணியினுடனான இலங்கை அணியின் தொடர் தோல்விக்குக் காரணம் என சிறிலங்கா கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மாவன் அத்தப்பத்துவின் தலைமைத்துவத்திலும் குறைபாடுகள் காணப்பட்டதாகத் தெரிவுக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். எனினும் ஒரு போட்டித் தொடரில் இலங்கை அணி பின்னடைவை எதிர்நோக்கியமைக்காக அவரை அணித் தலைமைத்துவத்திலிருந்து அகற்ற வேண்டுமென்று தெரிவுக்குழுவின் கருத்தல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தேவை ஏற்படும் பட்சத்தில் மாவன் அத்தப்பத்துவை தலைமைத்துவத்திலிருந்து நீக்குவதற்கு நேரிடலாம் என கிரிக்கெட் தெரிவுக்குழுவினர் கூறியுள்ளனர்.



## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி; மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# பிரியாவிடை

சிறிலங்காவில் பதினொரு ஆண்டுகள் சனாதிபதியாகப் பதவி வகித்த சனாதிபதி சந்திரிகா பிரியாவிடை பெற்றுச் செல்லத் தயாராகிறார். அவர் தனது பிரியாவிடை உரையை இன்று நாட்டு மக்களுக்கு ஆற்றவுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா பெரும் துயரத்துடன், ஏமாற்றத்துடன் தான் பதவி துறந்து செல்லவுள்ளார் என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. அரசியலமைப்பை மாற்றித்தனது பதவிக் காலத்தை அவர் மேலும் நீடிக்க அன்றி புதிய அரசியல் யாப்பின் அடிப்படையில் பிரதமர் பதவியை வகிக்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் சிறிதளவும் முன்னேற்றம் காணாது போனது. இதே சமயம் தனது பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டிலேயே முடிவடைகின்றது என்ற அவரது வாதமும் உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதொன்றாகி விட்டது.

இவ்வாறான பதவியில் நீடிப்பதற்கான முயற்சிகள் தோல்வி அடைந்தமை ஒரு புறம் இருக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், அவரால் திறம்பட வழி நடத்தச் செல்ல முடியவில்லை. சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுடன் சீரான உறவு நிலையைக்கூட அவரால் இன்று பேணமுடியாததொரு நிலையே உள்ளது. இன்று சனாதிபதி சந்திரிகா கூறுவதை விட ஜே.வி.பி யினர் கூறுவதற்கே மகிந்த ராஜபக்ஷ செவி சாய்ப்பவராகவுள்ளார்.

இத்தகைய நிலையில் ஓய்வு பெறப் போகும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது அரசியல் எதிர்காலம், பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் அரசியல் எதிர்காலம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் என்பன தொடர்பாக தீராத கவலையுடனும், நம்பிக்கையற்ற எதிர்காலத்துடனுமே பதவி துறக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

ஒரு சனாதிபதி இரண்டு பதவிக்காலத்திற்கு மேல் பதவி வகிக்க முடியாதென்பதும் அரசியல் தலைவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்குவதும் ஒன்றும் புதிதல்ல. அமெரிக்காவில் கூட இரு தடவைக்கு மேல் ஒருவர் சனாதிபதிப் பதவி வகிக்க முடியாது என்பது அரசியல்யாப்பு விதி. அதேபோல் பல அரசியல் வாதிகள் ஒரு குறிப்பிட்ட நிலையில் அரசியலில் இருந்தும் அரசியலில் நடவடிக்கைகளில் இருந்தும் ஒதுங்குவதும் வழமையே.

அமெரிக்க சனாதிபதியான பில்கிளிங்டன் தனது இரு பதவிக்காலத்தின் பின் அரசியலில் இருந்து ஒதுங்கினார். ஆனால் சனாதிபதி சந்திரிகாவை விட இளவயதினரான பில் கிளிங்டன் மேலும் ஆட்சியில் நீடிக்க முயற்சி எதனையும் செய்யவில்லை. பதவி துறந்து செல்தைப் பற்றி கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. மாறாகப் பொதுச் சேவையில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். மக்களும் அவருக்கு உரிய கௌரவத்தை வழங்குகின்றனர்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா பதவி துறந்து செல்வது குறித்து கவலை கொள்வதும், எவ்வாறெனினும் ஆட்சியில் நீடிக்க வேண்டும் என அக்கறை கொண்டதுமேன்? இதற்கு ஒரு புறத்தில் அதிகாரத்தின் சுகம் காரணமாக இருக்கலாம். அதாவது சனாதிபதிப் பதவி என்பது அவர்களுக்கு வாரி வழங்கிய அதிகாரங்களை அவர்கள் தமது தேவைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப பயன்படுத்தியமை காரணமாக இருக்கலாம். மறு பக்கமாகக் கூறுவதானால் இவ் அதிகாரங்களைத் துறந்து அவர்களால் வாழமுடியாது இருக்கலாம்.

இதனைத்தவிர வேறு ஒரு காரணமும் இருக்கக்கூடும் அதாவது நிறைவேற்று அதிகாரங்களைத் தாம் எவ்வாறு வேறு ஒருவருக்கு எதிராகவோ, வேறு தரப்பினருக்கு எதிராகப் பயன்படுத்தினரோ அவ்வாறே தமக்கு எதிராகவும், புதியவர்களால் அதிகாரம் பயன்படுத்தக்கூடும் என்ற அச்சம் காரணமாக இருக்கலாம். அதாவது அதிகார இழப்புக் குறித்து மட்டுமல்ல தமக்கெதிரான அதிகாரப் பிரயோகங்கள் பற்றியும் கவலை கொண்டிருக்கலாம்.

இவை யாவற்றிற்கும், மேலாக இவர்கள் நாட்டு மக்களுக்கு எதனைச் செய்தார்கள்? என்பதே இவர்களை மக்கள் நினைவிற் கொள்ளவும், கௌரவிக்கவும் காரணமாகின்றது. ஆனால் சனாதிபதி சந்திரிகாவிற்கு மட்டுமல்ல சிறிலங்காவின் ஆட்சித் தலைவர்கள் யார் தான் பதவி துறந்த பின்னர் மக்களின் மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் உரியவர்களாக இருந்துள்ளனர்?

ஏனெனில் இவர்கள் நாட்டிற்கு சுபீட்சத்தையோ, அபிவிருத்தியையோ விட்டுச் சென்றவர்களாக இல்லை. நாட்டில் யுத்தத்தையும், அமைதியின்மையையும், அழிவையும், தீர்க்க முடியாத நெருக்கடிகளையுமே விட்டுச் சென்றவர்கள் ஆகும். அதாவது இவர்கள் பதவி துறந்த பின்னர் நாட்டு மக்கள் அவர்கள் பற்றிப் பெருமைப்பட எதையுமே விட்டுச் செல்லவில்லை. மாறாகப் பெரும் சுமைகளையே விட்டுச் சென்றுள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவும், இதற்கு விதிவிலக்கானவரல்ல. நாட்டை இலகுவில் சீர் செய்ய முடியாதொரு நெருக்கடி நிலைக்குள் தள்ளி விட்டே சனாதிபதி சந்திரிகா பிரியாவிடை பெறுகின்றார். ஆகையினால் மக்கள் சனாதிபதி சந்திரிகா பற்றிப் பேசிக் கொண்டே இருக்க முடியாது. இவர்கள் உருவாக்கிய பிரச்சினைகள் நெருக்கடி[illegible] என்பனவற்றில் இருந்து மீள்வதற்கான போராட்டமே [illegible] பிரச்சினையாகிவிடும்.




பேரினவாதிகளின் தேர்தலும் தமிழர் நிலைப்பாடும்...

# சிறிலங்காவுக்கு அரச ஊடகம் தேவையில்லை

# அடுத்த தேர்தலில் கட்டுப்பணம் 50 இலட்சம்

## –சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவுக்கு அரச ஊடக நிறுவனங்கள் எதுவும் தேவையில்லை என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க கருத்துத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது;

சனாதிபதித் தேர்தலில் அரச மற்றும் தனியார் ஊடகங்கள் பக்க சார்பற்ற முறையில் செயற்பட வேண்டும். சிறிலங்காபோன்ற சனநாயக நாடுகளின் சுயாதீனமாக செயற்படக்கூடிய பி.பி.சி போன்ற ஊடகங்கள் தான் தேவை.

அரச ஊடகமானது பக்கசார்பாக நடந்துகொள்வதாகக் கருதப்பட்டால் அது குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும். கம்யூனிச நாட்டுக்கோ சர்வாதிகார நாட்டுக்கோ அரச ஊடகம் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் சிறிலங்காவுக்குத் தேவையில்லை. கொத்தணி வாக்குச்சாவடிகள் தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்த இரு வேட்பாளர்களும் எமது வழிகாட்டுதல்களை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல சிறிலங்கா முழுமைக்குமே நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கொத்தணி வாக்குச் சாவடிகளில் மட்டுமல்லாது அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் சந்தேகத்திற்குரிய வாக்காளர்களின் அடையாள அட்டைகள் கடுமையாகச் சோதிக்கப்படும். எதிர்வரும் சனாதிபதித்தேர்தல்களில் வேட்பாளர்களின் கட்டுப்பணத் தொகையானது ரூபா 50 ஆயிரத்திலிருந்து ரூபா 50 இலட்சமாக உயர்த்தப்படும் என்றார் தயானந்த திசாநாயக்க.

# தாய்மண்ணை காட்டிக் கொடாது சமாதானத்தை ஏற்படுத்துவேன்

## – பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

சகல இனங்களுக்கும் அச்சமும் சந்தேகமும் இல்லாது வாழக்கூடிய சூழலை உருவாக்கி கௌரவமான சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்துவதே தனது எதிர்பார்ப்பு எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதியில் அதனை ஏற்படுத்தக்கூடிய தெளிவான திட்டங்கள் தன்னிடம் உள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

கனேமுல்லையில் நேற்றுமுன் தினம் நடை பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தாய்மண்ணை ஒருபோதும் காட்டிக்கொடுக்கப் போவதில்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

எனினும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

எமது அடையாளங்களை பாதுகாத்துக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதோடு பல்தேசிய சக்திகளுக்கு தலைவணங்கப் போவதில்லை எனவும் பிரதமர் தெரிவித்தார்.

மகிந்தவின் நோக்கு என்ற தனது தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நிறைவேற்றக்கூடிய வகையில் இந்தமுறை வரவு செலவுத் திட்டத்தில் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்டத்தின் யோசனைகளை செயற்படுத்தி சனாதிபதி முன்னெடுத்துச் சென்ற நடவடிக்கைகளை தானும் முன்னெடுத்துச் செல்லப்போவதாகப் பிரதமர் தெரிவித்தார். (32)

# பதுளையில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் மீது பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்கு

ஐக்கிய தேசியக் கட்சியின சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக பதுளையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பரப்புரைப் பேரணியின் போது பொலிசார் கண்ணீர் புகைக் குண்டு வீச்சினை மேற்கொண்டுள்ளனர். இதில் ஐவர் காயமடைந்து பதுளை அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தால் பதுளை நகரில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. மோதல்கள் வன்முறைகள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக நகரின் பல இடங்களிலும் கலகம் அடக்கும் பொலிசார் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும் நேற்று முன்தினம் மாலைவரை நிலைமை சுமுகமாகவே இருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; நேற்று முன் தினம் காலை சுமார் பத்து மணியளவில் தேர்தல் பரப்புரைப் பணிகளின் பொருட்டு நூற்றுக்கணக்கான ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் பதுளை மணிக்கூட்டு கோபுரப் பகுதியிலிருந்து ஒன்று கூடி பதுளை நகரப் பகுதியில் பரப்புரைப் பணியில் ஈடுபடத் தயாரானர்கள் பதுளை ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் சட்டவாளர் சுஜீவ ஜயசிங்க தலைமையில் கூடிய ஐதே.க. ஆதரவாளர்களே பதுளை நகரில் பரப்புரைப் பணிகளில் ஈடுபடும் பொருட்டு பேரணியாக பச்சைநிற தொப்பிகளை அணிந்தவாறும் கோசங்களை எழுப்பியவாறும் துண்டுப் பிரசுரங்களை வழங்கியவாறும் சென்றுள்ளனர். இதன்போது பொலிசார் நகர வீதியாக, பேரணியாக செல்ல வேண்டாம் எனவும் கட்சித் தொப்பிகளை கழற்றுமாறும் கோரியதுடன் அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் சிறுசிறு குழுக்களாகப் பரப்புரைப் பணியில் ஈடுபடுமாறும் கேட்டுக்கொண்டனர்.

எனினும் பேரணியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் தாங்கள் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தாதவகையில் நடந்து கொள்வதாகக் கூறியதுடன் கட்சித் தொப்பிகளை கழற்ற மறுத்தனர். இதனையடுத்து பொலிசாருக்கும் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து முறுகல் நிலைமை ஏற்பட்டு பெரும் ஊர்தி நெரிசலும் ஏற்படவே மேலதிகமாகக் கலகம் அடக்கும் பொலிசார் வரவழைக்கப்பட்டு இவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலும் இடம்பெற்றுள்ளது. இதன்போது ஐவர் காயமடைந்ததாகத் தெரிய வருகிறது. (32)

# சுனாமி தற்காலிக குடியிருப்புகளில் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம்

சுனாமிப்பேரலையினால் இடம் பெயர்ந்த வடமராட்சிகிழக்கு மக்களின் குடியிருப்புக்கள் மழை காரணமாக மிகமோசமாகப் பாதிப் படைந்து வருவதோடு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்தியுள்ள இடைத தங்கல் முகாம்கள் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக நீர் தேங்கி வீடுகளுக்குள் புகுந்ததால் மக்களின் உடைமைகள் பாதிப்புக் குள்ளாகின. அத்தோடு அக்குடியிருப் புக்கள் குறைந்தது ஆறு மாதகாலம் வசிப்பதற்கு ஏற்றவாறு அமைக்கப் பட்டதனால் அவை மழைகாலத் திற்கு தாக்குப்பிடிக்கக்கூடியவாறு இல்லை என மக்கள் கவலை தெரி விக்கின்றனர். அத்தோடு மக்களின் குடியிருப்புகளுக்குள்ளும் அவற்றுக்கு அண்மையாகவும் நீர் பெருமளவில் தேங்கி நிற்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதோடு தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பும் அதிகரித் துள்ளதாக மக்கள் அஞ்சுகின்றனர்.





மேலும் இக்குடியிருப்புக்களுக் கென அமைக்கப்பட்ட மலசலகூடங் களும் நீரில் மூழ்கியுள்ளதனால் மக் கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு அவை மூலமாகவும் தொற்று நோய்கள் ஏற்படலாமென மக்கள் தெரிவிக் கின்றனர்.

இதேவேளை குடியிருப்புக்குள் செல்லும் வீதிகளும் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (கு,ச)

# யாழ்.இல் கண்ணி வெடியகற்றும் ஊழியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹலோரஸ்ட் நிறுவனத்தைச்சேர்ந்த கண்ணி வெடியகற்றும் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் நால்வர் எந்தவகையான முன் னறிவிப்புக்களோ அன்றி விசாரணைகளோ இன்றி வேலையில் இருந்து நிறுத்தப்பட்டதைக் கண்டித்து ஊழியர்கள் நால்வரும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

நேற்றுக்காலை இவர்கள் ஹலோரஸ்ட் நிறுவனத்தின் முன்னர் தமது இடைநிறுத்தத்திற்கான காரணத்தைக்கூறக் கோரி மறியற் போராட்டத்தில் ஈடுபட்டமைக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய200இற்கு மேற்பட்ட கண்ணி வெடியகற்றும் ஊழியர்கள் வேலைக்குச் செல்லாது புறக்கணிப்பு போராட்டம் நடத்தினர்.

இதன் காரணமாக ஹலோரஸ்ட் நிறுவனத்தின் அனைத்துப் பணிகளும் முடங்கப்பட்டன. குறிப்பிட்ட இடத்திற்கு யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் சி. சிவசுவாமி சமுகம் கொடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தவர்களுடன் கலந்துரையாடிய போதிலும் அவர்கள் மேலதிக அரசாங்க அதிபரின் வேண்டுதலை ஏற்க மறுத்து விட்டார்கள்.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் தங்கராசா இராசநாயகம், சோதி போக ராசா, வீரையா ஜெயவீரன், அமிர்தநாதர் அன்ரனிவிஜி ஆகியோரே ஈடுபட்ட வர்கள் ஆகும். இவர்கள் தமக்கு நியாயமான முறையில் தம்மை வேலையில் இருந்து இடைநிறுத்தியமைக்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் எனவும் இல்லை யென்றால் தமக்கு மீண்டும் வேலை தருவதுடன், இத்தகைய செயல்கள் எதிர்காலத்திலும் இடம்பெறக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்கள்.

(41,கீ,37,33,28)

## மூன்று..

கேட்டு தமிழீழ காவல்துறையின் பரிசோதகர் பவானி வாதிட்டார். பவானி தனது வாதத்தில் இந்தப் பொலிசார் மீதான விசாரணைகளை மேற்கொள்வதற் காக நாம் மன்றில் கால அவகாசம் கேட்டிருந்தோம். அதன் பிரகாரம் மன்று வழங்கிய காலஅவகாசத்தில் இவர்களைத் தடுத்துவைத்து எமது புலன் விசார ணைகளை மேற்கொண்டோம். எம்மால் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை களின் அடிப்படையில் குறிப்பிட்ட நபர்கள் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவித்தாக்குதல் நடத்தும் நோக்குடன் உள்நுழைந்துள்ளனர் என்பது வெளிப்படும் வகையிலான தரவுகள் கிடைத்துள்ளன.

எனவே எமது புலன் விசாரணைகள் மூலம் கிடைத்ததரவுகளை ஆய்வு செய்யவேண்டும். அது தொடர்பில் மேலதிக புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும். இதனால் குறித்த நபர்களை மேலும் விசாரணைக்குட்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. எனவே இந்தநிலையில் 'எமது தொடர் புலனாய்வு முன்னேற்றமான நிலையில் நகர்ந்து செல்வதற்கு மேலும் கால அவகாசம் வேண்டியுள்ளது. எனவே இந்தத்தரவுகளின் அடிப்படையில் எமது ஆய்வுகளும் விரிவான அறிக்கைகளும், அவை தொடர்பாக இவர்களை விசாரணை செய்தும் விரிவான அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பித்துள்ளோம். எனவே மேலும் கால அவகாசம் தந்து இவர்கள் மீதான விளக்கமறியலை நீடிக்குமாறு கேட்கின்றேன் என்றார்.

எதிர்த்தரப்பில் மூன்று பொலிசார் சார்பாகவும் வாதிட்ட சட்டவாளர் ரி.எஸ். வேலவர் இந்த வழக்குத் தொடர்ந்தும் தொடுநர் தரப்பால் தவணை கோரப்பட்டவண்ணம் உள்ளது என்பதை என்னால் அவதானிக்க முடிகிறது. எனவே இந்த வழக்கில் தொடுநர் தரப்பின் கருத்துக்களை மீள ஆராய்ந்து தடுத்து வைக்கப்பட்ட மூவரும் தமது நிலை தொடர்பாகக் கதைக்கவேண்டு மென்றும் கூறுகிறார்கள். எனவே இவற்றுக்கு அமைவாக நடவடிக்கையை மன்று எடுக்கவேண்டும் என்றார். இருதரப்பு வாதங்களையும் அவதானித்த நீதியாளர் சாதனா தடுத்துவைத்து விசாரிக்க அனுமதித்து வழக்கை வரும் 28ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (லோ,தீ)

## யாழ்.குடா...

தேர்தல் நாளன்று விசேட அதிரடிப் படையினர் பல பிரதேசங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வன்முறைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இறுதித்...

கொழும்புக்குள் புகுந்துள்ளதாகக் கிடைத்த புலனாய்வுத்தகவலையடுத்தே அவர் இறுதிப்பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மருதானையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்வார். இந்நிகழ்வில் இந்தியக் கலைஞர்கள் பலர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# அம்பாறையில் பாரஊர்தி ஒன்றில் வெடிபொருட்கள் பிடிபட்டன

அம்பாறை நகரை அண்டிய பகுதியில் வைத்துப் பொலிசார் வெடி பொருட்கள் சிலவற்றை நேற்று கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்துள் ளனர்.

சி4 40 கிலோக்கிராம் டிக்னேட்டர் 100 வயர்கள் என்பவற்றை பார ஊர்தி ஒன்றில் கடத்திச்சென்ற போது பொலிசாரால் அவை கைப்பற்றப் பட்டதாக அம்பாறை பொலிசார் தெரி வித்தனர்.

இவற்றுடன் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிசார் கைது செய் துள்ளனர். (32)

## நீரில்..

றுக்கென வெட்டப்பட்ட கிடங்கில் தவறு தலாக வீழ்ந்து ஒன்றரை வயதான நிதர்சன் எனும் சிறுவன் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார். (08)

## தேர்தலைப்..

இதுதொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன், பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், ஈழவேந்தன், பேராசிரியர் சிவானந்த மூர்த்தி, சட்டத்தரணி பொன்பூலோக சிங்கம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைச் செயலாளர் ரவீந்திரன், பல் கலைக்கழக ஊழியர்சங்கத் தலைவர் தங்ககராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு தமிழ்மக்கள் தேர் தலைப் பகிஷ்கரிப்பதற்கான காரணங் கள் பற்றி விளக்கினர்.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்ட தாவது;

காலம் காலமாக சிங்கள அரச தலைமைகளினால் ஏமாற்றப்பட்டு வந்த தமிழினம் இனியும் ஒரு பேரின வாதத்தலைமையை ஏற்றுக்கொண்டு அவர்களை நம்புவதற்குத் தயாராக இல்லை என்பதனை உலகத்திற்கு அறிவிக்கும் முகமாக தமிழ் மக்கள் அனைவரும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்து அன்றைய தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்கத் தீர்மானித்துள்ளோம். இதன் மூலம் சிங்களத்தலைமைகளை நிராகரித்து தமிழ் மக்கள் தமது ஏக தலைமை யாக தமிழீழ விடுதலைப்புலிகளை மட்டுமே ஏற்றுக்கொள்கின்றனர் என்பதை நிரூபித்துக்காட்டவுள்ளோம்.

இதன் மூலம் சிங்களப் பேரின வாத முகத்திரை கிழிக்கப்பட்டு தமிழி னத்தின் பக்கம் சர்வதேச கவனம் திரும்ப வாய்ப்புருவாகும். இதன் மூலம் இலங்கையில் நிகழும் இன வாத அராஜகங்கள் வெளி உலகிற்கு கொண்டு செல்லப்படும்.

இது தமிழ் மக்களின் அபிலாசைக் கோரிக்கைகளுக்கு சர்வதேசம் பதில ளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உரு வாக்கும்.

இது இவ்வாறிருக்க தமிழ் மக் களை பல வந்தமாக வாக்களிப்பில் ஈடுபடுத்துவதற்கான திட்டங்களுடன் அரச படைகளும் தேசவிரோதிகளும் செயற்படுகின்றார்கள். இவ்வாறான ஓர் நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டால் மக்கள் தமது வாக்கை செல்லுபடியற்றதாக மாற்றி தமது பலத்தை நிரூபித்து அடக்கு முறையாளர்களுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

இதைவிட 'தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பின் பின்னணியில் புலிகள் உள்ளதாகக் கூறப்பட்டு தேச விரோதிகள் தம் பிரச்சாரத்தை முன் னெடுக்கின்றனர். இது அப்பட்டமான பொய் மக்கள் தாமாகவே முன்வந்து முடிவெடுத்து தேர்தலைப் பகிஷ்கரிக் கின்றனர். இதை தேச விரோதிகள் தமது அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்துகின்றனர். புலிகளின் பெயரால் தேர்தலில் பங்கு கொள்வ தற்கான அழைப்பு ஒன்றும் யாழ்ப் பாணத்தில் சுவரொட்டிகள் மூலம் விடுக்கப்பட்டது. இதற்கும் அவர்களுக் கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

இது தமிழினத்தைக் கூறுபோட்டு விற்று அரசியல் சுயலாபம் தேடும் தேசவிரோதிகளின் செயல். இவ்வா றான செயல்களை நாம் வன்மை யாகக் கண்டிக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முடிவில் தமிழினத்தின் அபிலாசைகளை வெளிப்படுத்தி சிங்களத்தலைமைத்துவத்தை நிரா கரிக்கின்றோம் என்பதை வெளிப் படுத்தும் முகமாக உறுதி மொழியும் வழங்கி பத்திரிகையாளர் முன்னிலை யில் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (33,37,கீ,28)

# சர்வதேச குழந்தைகள் தினத்தில் முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வு

சர்வதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகளின் கலை நிகழ்வுகள் நேற்று வடமராட்சி கிழக் கில் நடைபெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் இந்நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வடம ராட்சிகிழக்கு வத்திராயன்குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் நடை பெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இயங்கிவரும் 19 முன்பள்ளிகளின் 550 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்துகொண்ட னர்.

இந்நிகழ்வில் ஒவ்வொரு முன் பள்ளியிலிருந்தும் வருகைதந்த சிறார் கள் தமது கலைத்திறனை வெளிக் கொண்டுவரும் வகையில் பல கலை நிகழ்வுகளை நிகழ்த்தினர்.

முன்பள்ளி ஆசிரியர்களின் நெறிப் படுத்தலில் தயாரிக்கப்பட்ட நாடக, நடன,இசை, நிகழ்வுகளில் இச்சிறு வர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கு பற்றியதோடு சிறுவர்களின் பெற் றோரும் இந்நிகழ்விற்கு ஒத்துழைப் புகளை வழங்கியிருந்தனர்.




நேற்று முற்பகல் பத்து மணி க்கு ஆரம்பமான இந்நிகழ்வில் தமி ழீழத் தேசியக்கொடியினை தமிழீழ கடற்படையின் வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் ஏற்றிவைக்க, மங்கல விளக்குகளை உடுத்துறை கிராம அலுவலர்,வட மராட்சிகிழக்கு தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சின்னராசா, வடமராட்சிகிழக்கு காவல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றினர். அடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி, முன்பள்ளிக்கொடிகள் என்பன ஏற்றப்பட நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டதோடு தமிழீழ விடுதலைப்புலிகளின் பொறுப் பாளர்கள், போராளிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பல ரும் கலந்து கொண்டனர். (ச,கு)

## கருணா...

நான் பசி, நிவாரணம் பற்றிப் பேசுகின்றேன். யுத்தத்தை நிறுத்தியுள்ளேன். சமாதானத்தை நிலை நாட்டினேன். இன்று நாட்டில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. பசி என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முதல் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புகின்றேன். தெற்கை விட வட, கிழக்கில் பிரச்சினைகள் அதிகம். அவற்றை சீர்தூக்கிப் பார்த்து தீர்வினைக் காணவேண்டும். யுத்த நிறுத்த அமுலாக்கத்தால் பொருளாதாரம் வளர்ச்சி கண்டது. 2003 அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமானது. 2004 இல் வட, கிழக்கில் விவசாயத்தை ஆரம் பிக்க முடிந்தது. இங்கு நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டதால் 2004 இல் அரிசியில் தன்னிறைவைக் காண முடிந்தது. இன்று கிளிநொச்சி முக்கிய நகரம். வணிக வாய்ப்புகள் பெருகின. எனினும் இந்த அபிவிருத்தி போது மானதல்ல. இன்னும் பல அபிவிருத்தி திட்டங்கள் தேவை. கடற்கோளினால் மேலும் அழிவு ஏற்பட்டது. இதனாலேயே நான் கடல் கோள் நிவார ணத்திற்காக 365 நாட்களை ஒதுக்கியிருந்தேன். புலம் பெயர்ந்தோருக்கு பிரத்தியேக அமைச்சு ஏற்படுத்தப்படவுள்ளது. மீண்டும் யுத்தத்திற்குச் செல் லாது சமாதானத்தை பேண வேண்டியுள்ளது. அதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளோம். இவை எல்லாவற்றும் மேலாக பசி நிவாரணம் முக்கியமானது என்றார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.